JAFFNA

ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

15.07.2015 - மலர் 12, இதழ் 20




PUBLIC LIBRARY
JAFFNA

## செவ்வாய் செல்லும் 39 நாள் செயற்றிட்டம்





நெக்டோ பென்ச்சாவின் கதை

(9ஆம் பக்கம்)



## கண்ணாடியைப் பார்த்து மிரண்ட விலங்குகள்



## பாடசாலை உபகரணங்களை நண்பர்களுக்கு கொடுத்து உதவுவோம்...




விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருகிலுள்ள பொருட்கள் இந்த வீட்டின் எப்பகுதியில் இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுக.**





------------------


------------------


------------------


------------------



------------------

**இவர்கள் யாவர்? செய்வது என்ன?**




1. ........................................ விளையாடுகின்றது.
2. ..................... தேநீர் அருந்திக்கொண்டிருக்கின்றார்.
3. ........................................ தரைவிரிப்பில் தூங்குகின்றது.
4. ........................................ படிக்கின்றனர்.
5. ........................................ தேநீர் தயாரிக்கின்றார்.


**இங்குள்ள சொற்களின் அடிப்படையில் படங்களை வகைப்படுத்துக.**

- ★ இயற்கை (இ)
- ★ விளையாட்டு (வி)
- ★ மருத்துவம் (ம)
- ★ போக்குவரத்து (போ)

உ+ம்: (இ)



1. மருத்துவத்தில் உதவி செய்யக்கூடியவர்கள் யாவர்?
   ........................................................
2. என்னென்ன விளையாட்டுக்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன?
   ........................................................
3. இயற்கையை காட்டுபவை எவை?
   ........................................................




**கணேஷ் தனது குடும்பத்தார் உட்பட, உறவினர்களுடன் ஒருநாள் சுற்றுலா சென்றான். இங்கிருக்கும் காட்சிகளை மையமாகக் கொண்டு, கணேஷின் ஒருநாள் சுற்றுலா பற்றி சில வாக்கியங்களை எழுதுக.**







........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................


-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானின் சிந்த் மாகாணத்தினை மையமாகக் கொண்டு செயற்கை மழையினை பொழியச் செய்வதற்கு அந்நாட்டு அரசாங்கமும் வானியல் துறை விஞ்ஞானிகளும் அண்மையில் நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். பாகிஸ்தானில் நிலவிய அதிக வெப்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல், பல நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்ததை அடுத்தே, அந்நாட்டு அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கையை எடுத்திருந்தது.







# அதிக வெப்பத்தைத் தணிக்க பாகிஸ்தானில் செயற்கை மழை

பாகிஸ்தானின் கராச்சி நகரிலேயே அதிகளவு வெப்பநிலை பதிவாகி வருகின்றது. அதிக வறட்சியான காலநிலை காரணமாக, சிந்த் மாகாணத்தில் மட்டுமன்றி பாகிஸ்தானின் பிற பகுதிகளிலும் தண்ணீர் தட்டுப்பாடு மிகவும் தீவிரமாகக் காணப்படுகின்றது. பண்ணை விலங்குகளும் இதனால் இறக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாக, தொற்றுநோய்களும் பரவி வருகின்றன. எதிர்வரும் நாட்களில்கூட, மழையை எதிர்பார்க்க முடியாது என்று பாகிஸ்தானின் வானியல் திணைக்கள விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்ததை அடுத்தே செயற்கை மழை தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## ரசாயனம் விசிறல்

இதனையடுத்து, கடந்த ஜூன் மாதம் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில், அங்கு செயற்கை மழையை பொழியச் செய்வதற்கான ரசாயனம் விசிறப்பட்டது. செயற்கை மழையினை உருவாக்கும் ரசாயனம் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் அடி உயரத்தில் உள்ள முகில்களுக்கே விசிறப்படுகின்றன. இச்செயற்பாட்டினை பாகிஸ்தானின் துறைமுக கடற்படை அமைச்சும் வானிலை விஞ்ஞானப் பிரிவும் இணைந்து மேற்கொண்டிருந்தது. அந்நாட்டின் விவசாய ஆராய்ச்சி நிறுவனமும் சிவில் மற்றும் விமான சேவைகள் அதிகார சபையும் இதற்கு ஒத்துழைப்பை வழங்கியிருந்தன.



விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

## அடர்த்தியான காபனீரொக்சைட் துகள்கள்

செயற்கை மழையை பொழியச் செய்வதற்கு பல்வேறு வகையான ரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றபோதும், தற்போதளவில் அடர்த்தியான காபனீரொக்சைட் துகள்களே பிரதானமாக பயன்படுத்தப்படுகின்றன. இந்த துகள்கள் முகில்கள் மீது விசிறப்படுகின்றபோது, அந்த முகில்களில் ஈரப்பதன் அதிகரித்து, செயற்கை மழை உருவாக்கம் நிகழ்கின்றது. அவ்வாறே, சோடியம் க்ளோரைட் மற்றும் நீர்க்கலவை ஒன்றும் இதன்போது பயன்படுத்தப்படுவதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

-அஷ்விதா

# வரலாற்றில் இந்த நாள்...

## ஜூலை - 15

* 1815 ஆம் ஆண்டு: பிரெஞ்ச் மன்னன் நெப்போலியன், பிரித்தானிய படையினரிடம் சரணடைந்தார்.
* 1888 ஆம் ஆண்டு: ஜப்பானில் எரிமலையொன்று வெடித்ததில் சுமார் 500 பேர் பலியாகினர்.



## ஜூலை - 16

* 1979 ஆம் ஆண்டு: ஈராக்கிய ஜனாதிபதி ஹசன் அல் பக்ர், பதவியை ராஜினாமா செய்தார். புதிய ஜனாதிபதியாக சதாம் ஹுஸைன் பதவியேற்றார்.
* 1999 ஆம் ஆண்டு: முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடி ஜூனியர் உட்பட, அவரின் மனைவி, மைத்துனி ஆகியோர் விமான விபத்தொன்றில் பலியாகினர்.






## ஜூலை - 17

* 1973 ஆம் ஆண்டு: ஆப்கானிஸ்தான் மன்னர் மொஹமட் ஸாஹிர் ஷா, வெளிநாடு சென்றிருந்தபோது ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.
* 1976 ஆம் ஆண்டு: இந்தோனேஷியாவின் 27 ஆவது மாகாணமாக கிழக்கு தீமோர் இணைக்கப்பட்டது.



## ஜூலை - 18

* 1925 ஆம் ஆண்டு: அடோல்ஃப் ஹிட்லர் 'மெயின் காம்ஃப்' (எனது போராட்டம்) எனும் தனது நூலை வெளியிட்டார்.
* 1918 ஆம் ஆண்டு: நெல்சன் மண்டேலா பிறந்தார். (இவர், பிற்காலத்தில் தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாகத் தெரிவானார்).



## ஜூலை - 19

* 1870 ஆம் ஆண்டு: பிரஷ்யாவுக்கு (புருசியா) எதிராக பிரான்ஸ் போர் பிரகடனம் செய்தது.
* 1985 ஆம் ஆண்டு: இத்தாலியில் அணைக்கட்டொன்று உடைந்ததில் 268 பேர் பலியாகினர்.



## ஜூலை - 20

* 1949 ஆம் ஆண்டு: இஸ்ரேலும் சிரியாவும் 19 மாத யுத்தத்தின் பின்னர், போர் நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.
* 1960 ஆம் ஆண்டு: இலங்கைப் பொதுத் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்க வெற்றிபெற்று பிரதமராகத் தெரிவானார். உலகின் முதலாவது பெண் பிரதமரும் இவரே.



## ஜூலை - 21

* 1969 ஆம் ஆண்டு: அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரோங், சந்திரனில் காலடிவைத்தார். இவரே, சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதராவார்.
* 1983 ஆம் ஆண்டு: உலகின் மிகக் குளிர்ந்த காலநிலை (- 89.2) பாகை செல்சியஸ் என அண்டார்க்டிக்காவில் பதிவானது.

-பூ.இஸ்ரத் இந்தியாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஓர்.... ஆத்திசூடி

## தொடர் விளக்கக் கட்டுரை





## ஆ – ஆறுவது சினம்

'கூழுக்குப்பாடி' ஔவையார் தனது ஆத்திசூடியில் கூறும் இரண்டாவது போதனை 'ஆறுவது சினம்' என்பதாகும். சினம் என்றால் கோபம். இதற்கு செற்றம், சீற்றம், முனி போன்ற கருத்துக்களும் உண்டு. கோபத்தை ஆற்றிக்கொள்ள வேண்டும் என்று இப் பொன்மொழி வலியுறுத்துகின்றது. இது மனித வாழ்வுக்கு மிகவும் அத்தியாவசியமான ஓர் அறிவுரையாகும்.

குணங்களில் மிகவும் கெட்ட, தீய விளைவுகளைத் தரவல்ல குணமே கோபமாகும். சான்றோர்கள் கோபம் என்ற துர்குணம் மனிதனிடத்தில் இருக்கவே கூடாது என்பதையே பெரிதும் போதித்தனர். இதனால்தான் 'ஆறாக்கோபம் போராய் முடியும்', 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்' போன்ற முதுமொழிகளைக் கூறிப் போதித்தார்கள். இவை கோபத்தின் கொடூர விளைவுகளை இரத்தினச் சுருக்கமாக விளக்குகின்றன. 'ஆத்திரம் அறிவுக்கு விரோதி' என்பார்கள். அதிக கோபம் ஒரு மனிதன் முட்டாளாக மாறுவதற்கு வழிசமைக்கும்.

ஆத்திரம் வந்ததும் அவசரப் புத்தியினால் கொலைகூட நேர்ந்துவிடுகின்றது. மொத்தத்தில் 'கோபம்' வெறுக்கத்தக்க ஒரு மிருக குணமாகும். 'சட்' டென எதற்கெடுத்தாலும் கோபப்படுபவர்கள் நம்மத்தியில் வாழ்வதுண்டு. அவர்களுக்கு நாம் கூறவேண்டியவை; அடிக்கடி கோபம் கொள்வதால் இரத்த ஓட்டம் பாதிப்படைகின்றது. இதயத்துடிப்பு சீர்கெடுகின்றது. சுவாசம் தடைப்படுகின்றது. முகத்தின் வசீகரம் இல்லாமல் போகின்றது. வாயில் வன்சொற்கள் பிறக்கின்றன. உள்ளத்தில் பழிக்குப் பழி தீர்க்க வேண்டும் என்ற நிம்மதியற்ற எண்ணம் உருவாகின்றது. கால்கள் தேவையற்ற இடங்களை நாடுகின்றன. கரங்கள் வெறுக்கத்தக்க செயல்களில் ஈடுபடுகின்றன. காலப்போக்கில் முழுச் சரீரமுமே பாதிப்புக்குள்ளாகின்றது என்பவையாகும்.

எம்முள் கோபம் வந்தால் வீண் வம்புகள் வளரும். அன்பு, பரிணமித்தால் நேற் பண்புகள் வளரும். அதனால், உள்ள இன்பம் நிறை சோலையாக மாறும், நற்செயல்கள் அதிகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவாகும். நோயற்ற மகிழ்வான வாழ்வு கிடைக்கும்.

எனவே, முனி ஒரு கொடிய பிணி என்பதை சிந்தித்து செயற்படுவோம்.

(தொடரும்)

**சப்ரி எம்.ஷாஃபி**

**(அடுத்த வாரம்- 'இயல்வது கரவேல்')**

---

# நடப்பது எல்லாம் நன்மைக்கே!

காட்டு ராஜா சிங்கத்தின் குகை வாசலில், ஏகப்பட்ட மிருகங்களின் கூட்டம். காட்டு ராஜா வேட்டையாடச் சென்ற போது, கால்விரலில் அடிபட்டு, விரல் துண்டாகிவிட்டதென்று அறிந்து துக்கம் விசாரிக்கத்தான் காட்டு மிருகங்கள் அங்கு கூடியிருந்தன. ஒவ்வொரு மிருகமாக வரிசையில் நின்று, குகையின் உள்ளே சென்று சிங்கராஜாவைப் பார்த்துவிட்டுத் திரும்பின.

சிங்கராஜா காலில் பலமான கட்டுடன், கட்டிலில் படுத்துக் கிடந்தார். அருகே சிங்கராணி கண்ணீர் மல்க அமர்ந்திருந்தார். ஒவ்வொரு மிருகமாக வரிசையாகச் சென்றுகொண்டிருந்தபோது, வரிசையின் இடையே வந்து, புகுந்துகொண்ட குள்ளநரி, ஏனைய மிருகங்களின் திட்டுக்களுடன் சிங்கராஜாவின் அருகே சென்றதும், பெருமூச்சு விட்டபடி "ஊம் நடப்பது எல்லாம் நன்மைக்கே" என்றது. இதைக் கேட்ட சிங்கராஜாவுக்கு கடும் கோபம் வந்துவிட்டது.

எனது காலிலுள்ள ஒரு விரலே போய்விட்டது. இந்தக் குள்ளநரி, நடப்பதெல்லாம் நன்மைக்கே, என்று கூறுகிறதே. "இதை குகைச்சிறையில் அடையுங்கள்" எனக் கட்டளையிட்டது சிங்கராஜா. சிப்பாய்க் குரங்குகள் பாய்ந்து, நரியைப் பிடித்து இழுத்துச் சென்றன.

"ஒவ்வொரு காரியமும் நமது நன்மைக்குத்தான் நடக்கிறது என்ற உண்மையைத்தானே நான் சொன்னேன்" என்று புலம்பியபடி சென்றது குள்ளநரி. சிங்கராஜாவின் காலிலுள்ள புண் குணமாவதற்கு மூன்று மாதகாலம் கடந்தது. காலில் ஒரு விரல் இல்லாமையால், சிங்கராஜா கம்பீரமாக நடக்க இயலாமல், நொண்டி நொண்டி நடந்தது. அதனால், மிருகங்கள் எல்லாம் மறைமுகமாக 'நொண்டி ராஜா' என அழைத்தன. இப்படிச் சிங்கராஜாவை எல்லோரும் கேலி செய்வதைக் கேட்டு, சிங்கராணிக்கு மிகுந்த வருத்தம்.

இதேவேளை, சிறையில் அடைபட்டிருந்த குள்ளநரிக்கு சைவ உணவே தினசரி ஒரு வேளை கொடுக்கப்பட்டது. வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்காமல், வார்த்தையைக் கொட்டிவிட்டு, வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டோமே, என ஏக்கப்பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தது குள்ளநரி.

ஒருநாள் வெகு நாட்களாகியும் குணமாகாமல் இருந்த காலுடன் நொண்டிக்கொண்டே காட்டில், வெகுதூரம் வேட்டைக்குச் சென்றது சிங்கம். ஓர் இடத்தில் திறந்து



வைக்கப்பட்டிருந்த ஒரு கூண்டுக்குள், ஆட்டுக்குட்டி ஒன்று இருந்ததைக் கண்டது. ஆவலுடன் ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து, கடித்துக் குதறி அதனை உண்டது. உண்டு முடித்து திரும்பிய சிங்கம் அந்த இரும்புக் கூண்டின் கம்பிக்கதவு மூடப்பட்டிருந்ததைக் கண்டு, திகைத்தது. அட... மடத்தனமாக கூண்டுக்குள் அகப்பட்டுக் கொண்டோமே என்று நினைத்து வேதனைப்பட்டது. அப்போது கூண்டில் அடைக்கப்பட்ட சிங்கத்தை, தங்கள் வண்டியில் கட்டி இழுத்துச் சென்ற காவலர்கள், "நம் இளவரசர் கேட்டபடி அவர் விளையாடுவதற்கு ஒரு சிங்கம் கிடைத்துவிட்டது. இதைப் பார்த்தால் மிகவும் மகிழ்ச்சியடைவார். இளவரசரின் மகிழ்ச்சியைக் கண்டு மன்னர் நமக்குப் பரிசுகள் கொடுப்பார்" என்றெல்லாம் பேசிக்கொண்டே அரண்மனையை அடைந்தனர்.


கூண்டிலிருந்த சிங்கத்தை இறக்கியபோதுதான் அது நொண்டி நொண்டி நடந்ததை அறிந்தனர். இதைக்கண்டு வருந்திய அவர்கள், "இது ஊனமுற்ற சிங்கம். இதை நம் இளவரசர் விளையாடப் பழக்கப்படுத்த முடியாது." எனவே, இதைக் காட்டில் கொண்டுபோய் 'விட்டுவிடுவதே நல்லது" என்று கூறியபடி சிங்கத்தை மீண்டும் காட்டுக்குள் கொண்டுசென்று விட்டுவிட்டுத் திரும்பினர் காவலர்கள். சிங்கத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது. "எனது காலில் விரல், இல்லாததால்தான் என்னை விட்டு விட்டார்கள்' 'நடப்பது எல்லாம் நன்மைக்கே' என்று அன்றைக்கு நரி சொன்னபோது, ஆத்திரப்பட்டு அதைக் சிறையில் அடைத்தோம். ஆனால், அது சொன்னது சரியென்று இப்போதுதான் உணர முடிகின்றது. யார் எதைச் சொன்னாலும் அவசரப்படாமல் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன்" என்று மகிழ்ந்த சிங்கம் நரியை சிறையிலிருந்து விடுவித்தது.

நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று நினைத்தால் துன்பம் தரக்கூடிய செயல் எதுவும் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறும் ரமழான்

## கற்றுத் தரும் படிப்பினைகள்



அருள் நிறைந்த ரமழான் மாதத்தின் இறுதிப் பத்து நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டிருக்கின்றன. கடந்து சென்ற நாட்களை மீட்டிப் பார்த்தால், நாம் இந்த ரமழானை எவ்வாறெல்லாம் கழித்திருப்போம் என்று எம்மால் உணரக்கூடியதாக இருக்கும். அல்லாஹுத்தஆலா தனது அடியார்களுக்காக வழங்கிய மகத்துவம் மிக்க இந்த மாதம் முழுவதும் நோன்பு நோற்று,



அல்லாஹுத்தஆலாவின் திருப்தியைப் பெறுவதற்காகவும் அருளை எதிர்பார்த்தவர்களாகவும் பாவமன்னிப்பை எதிர்பார்த்தவர்களாகவும் நரகத்திலிருந்து விடுதலையை எதிர்பார்த்தவர்களாகவும் அடியார்களாகிய நாம் காத்திருக்கின்றோம்.

அல்லாஹுத்தஆலாவின் கட்டளைப்படி, சரியான முறையில் இந்த நோன்பை நோற்றிருந்தால்தான், எமக்குரிய நற்கூலி கிடைக்கும். எனவே, எஞ்சியிருக்கும் நோன்புகளையும் சிறப்பான முறையில் நோற்று, அல்லாஹுத்தஆலாவின் திருப்தியைப் பெற்றவர்களாக ஆவோம்.

### ரமழான் வழங்கிய பயிற்சிகள்

ஒவ்வொரு வருடமும் ரமழானை அடையும்போது, எமது பண்புகள் மேலும் புத்துணர்வூட்டப்படுகின்றன. நோன்பு நோற்பதன்மூலமாக பொறுமை, மனக்கட்டுப்பாடு, நல்ல பேச்சு, நேர்மை, நன்னடத்தை, உளத்தூய்மை, ஒற்றுமை, இறையச்சம், உதவும் மனப்பான்மை, நேரமுகாமைத்துவம், பிறர் துன்பம் அறிதல், மனித நேயம் போன்ற ஏராளமான நற்பண்புகள் எம்மில் வளர்க்கப்படுகின்றன.



எனினும், ரமழான் மாதம் நாம் பெற்ற பயிற்சிகளை ரமழானுடன் மறந்துவிடாமல், அதனை நாளுக்கு நாள் செயற்படுத்த வேண்டும். எனவே, ரமழானில் இருந்தது போன்றே இனிவரும் நாட்களி லும் பிறரிடத்திலும் ஏனைய உயிர்களிடத்திலும் அன்பாகவும் கருணையோடும் நடந்திடுவோம். நல்ல வார்த்தைகளையே பேசுவோம். ரமழானில் ஸதகா, ஸகாத் போன்றவற்றைக் கொடுத்து, உதவும் மனப்பாங்கு உடையவர்களாக நாம் திகழ்ந்தோம். ஆக, பிறருக்கு உதவும் பழக்கத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம். ரமழானில் வீண் செயல்களில் ஈடுபடுவதை தவிர்த்திருந்தது போன்றே, ஏனைய மாதங்களிலும் அதனை செயற்படுத்துவோம். எப்போதும் எமக்குத் தேவையான விடயங்களில் மட்டும் கவனத்தை



செலுத்துவோம். தொழுகைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றவும் குர்ஆனை பொருள் விளங்கி ஓதவும் அதன்படி நடக்கவும் பயிற்சி பெற்ற நாம், அந்தப் பழக்கத்தை வழக்கப்படுத்திக்கொள்வோம். ஆக, இந்த ரமழான் மாதம் எமக்கு வழங்கும் பயிற்சிகளை, எமது முழு வாழ்க்கைக்குமான படிப்பினைகளாகக் கொள்வோம்.

'அனைவருக்கும் இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்'

-நுஸ்ஜீ

## பெருநாள் தர்மம்

நோன்பாளிகளால் வீண் தவறுகள் நேர்ந்திருப்பின், அவற்றிலிருந்து தூய்மை பெறுவதற்காகவும் ஏழைகளுக்கு பயன்மிக்கதாக இருக்கும் வகையிலும் கடமையாக்கப்பட்டதுதான் 'ஸகாதுல் ஃபித்ர்' எனும் நோன்புப் பெருநாள் தர்மம் ஆகும்.



ஸகாதுல் ஃபித்ர் வழங்குபவர்கள் தமது குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரின் பேரிலும் இதனை வழங்க வேண்டும். கோதுமை, அரிசி, பேரீச்சம்பழம் என ஏதாவதொன்றை, நடுத்தர வயதுடைய ஒருவரின் இரு கைகளின் கொள்ளளவில் நான்கு மடங்கினை ஸகாதுல் ஃபித்ராக வழங்குவது கடமையாகும். பெருநாள் தொழுகைக்கு முன்னரோ அல்லது பெருநாள் தினத்திற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னரோ இதனை பகிர்ந்தளிக்கலாம்.

## நோன்புப் பெருநாள்

ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று, ஷவ்வால் மாத தலைப்பிறை பார்த்ததையடுத்து, நோன்புப் பெருநாள் கொண்டாடப்படுகின்றது.



பெருநாள் தினத்தில் அதிகாலையில் நீராடி- புத்தாடையோ அல்லது ஆடைகளில் சிறந்ததையோ அணிவது சுன்னத்தாகும். பெருநாள் தொழுகைக்குச் செல்லும் முன்னர் காலை உணவை உட்கொண்டுவிட்டுச் செல்வது அல்லது ஒற்றைப்படையாக பேரீச்சம்பழத்தை உட்கொண்டு விட்டு செல்வது சுன்னத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை பிள்ளைகளில் பலர், தமக்கு தமது சகமாணவர்களிடம் இருந்து குறிப்புக் கொப்பியோ, பேனை, பென்சிலோ அல்லது அதனை ஒத்த வேறு ஏதேனும் பாடசாலை உபகரணம் ஒன்றையோ அவசரத் தேவையின்போது, பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதாக எண்ணுகின்றனர். தமது நண்பர்கள் பொறாமை அல்லது கோபத்தினாலேயே அவ்வாறு தருவதில்லை என்றும் கூறுவார்கள். இதே காரணத்தால் சில பிள்ளைகளின் நட்பும்கூட முறிவடைந்து போகின்றன. இது குறித்து இங்கு ஆராய்வோம்.



## நற்குணம் நிறைந்த பிள்ளை

நல்ல மனிதராக வாழ்வதற்கு கல்வி கற்பது மாத்திரம் போதுமானதல்ல. நீங்கள் மிகவும் திறமையாக கல்வி கற்பவராக இருக்கலாம். இந்த நிலையில் உங்கள் நண்பர் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றால் உங்கள் மனதில் அந்த நண்பர் குறித்து எத்தகைய கருத்து ஏற்படும்? தீய எண்ணமா? பொறாமையா? இத்தகைய எண்ணங்கள் ஏற்படுமாயின் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு இவை பொருத்தமானதல்ல.

நன்றாகக் கல்வி கற்பது போலவே உயர் குணமுள்ள பிள்ளையாக உங்களை வளர்த்துக்கொள்ளுங்கள். பொறாமை, பகைமை, துவேசம், குரோதம் என்பன மனதில் இருந்தால் அதனை அகற்றிவிடுங்கள். பாடசாலையின் ஒழுக்க விதிகளையும் சட்டதிட்டங்களையும் முறையாகக் கடைப்பிடித்து கௌரவத்தைப் பாதுகாருங்கள். ஆசிரியருக்கு கீழ்ப்படியுங்கள்.

# பாடசாலை உபகரணங்களை நண்பர்களுடன் பகிர்வ




## என்ன செய்யலாம்?

நன்றாகக் கல்வி கற்பதுபோலவே, உயர் குணமுள்ள பிள்ளையாக உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். பொறாமை, பகைமை, துவேசம், குரோதம் என்பன மனதில் இருந்தால் அதனை அகற்றிவிடுங்கள். பாடசாலையின் ஒழுக்க விதிகளையும் சட்டதிட்டங்களையும் முறையாகக் கடைப்பிடித்து கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அறிந்தவற்றை ஏனைய நண்பர்களுடன் இயன்றவரை பகிர்ந்துகொள்ளுங்கள். ஆசிரியர்கள் கற்பிப்பதை அவதானத்தோடு கேட்பதோடு, நல்ல பிள்ளைகளுடன் நெருக்கமாகவும் தீய பிள்ளைகளுடன் வெறுப்பில்லாமலும் நட்பை வைத்துக்கொள்ளுங்கள். பாடசாலைச் செயற்பாடுகளின்போது, செயற்திறன் மிகுந்த தலைமைத்துவத்தை மேற்கொள்ளுங்கள்.

## உங்களுக்கும் நண்பர்கள்

நண்பருக்கு உதவியாக உங்களின் குறிப்புக் கொப்பி, பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பனவற்றைக் கொடுத்து உதவுதல் தொடர்பாக சிந்தியுங்கள். இன்னொரு நாளில் இத்தகைய தேவை உங்களுக்கும் ஏற்படலாம். அப்பொழுது அந்த நண்பரின் உதவியை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். அதனால், இன்றைய நாளை சிந்திப்பதைப் போலவே நாளைய தினத்தையும் சிந்தித்து செயல்படுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிர்ந்துகொண்டு செயலாற்றுதல் நல்ல பிள்ளையின் லட்சணமாகும்

அவசர தேவையின்போது, வகுப்பில் குறிப்புக் கொப்பிகள், பேனை, பென்சில், பாட நூல்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை உங்கள் நண்பர்கள் உங்களிடம் கேட்கலாம். ஆனால், நீங்கள் அவற்றை அவர்களுக்கு கொடுக்காமல் தவிர்க்கக்கூடும். இதற்கு பொறாமை அல்லது அவர்மீதான கோபம் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், உங்கள் நண்பர் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்? நண்பர் உங்களை உலோபி என எண்ணலாம். அல்லது அவரின் திறமையைத் தடுப்பதற்காக நீங்கள் பாடசாலை உபகரணங்களை கொடுக்கவில்லை என எண்ணலாம். இத்தகைய காரணங்களால் அல்லது செயற்பாடுகளால் சில மாணவர்கள் வகுப்பறையில் நண்பர்கள் இன்றி தனிமையில் கழிப்பதைக் காணலாம்.

எனவே, உங்கள் வசம் மேலதிகமாகப் பேனை ஒன்று அல்லது பென்சில் ஒன்று இருந்தால் நண்பர் கேட்ட மாத்திரத்தில் அவற்றை மனமகிழ்ச்சியோடு கொடுங்கள். நீங்கள் அந்த பாடசாலை உபகரணங்களின்மூலம் ஏதாவது வேலை செய்துகொண்டிருந்தால் அந்த வேலை முடிந்த பின் நண்பர்களுக்கு அதனை மகிழ்ச்சியோடு கொடுங்கள். பகிர்ந்துகொண்டு வேலை செய்யும் விதம் இதுவே. இவ்வாறே, முதல்நாள் பாடசாலைக்கு வராத பிள்ளையொன்று உங்களிடம் குறிப்புக் கொப்பியைக் கேட்டால் அதனை கொடுப்பதற்கு நீங்கள் தயங்க வேண்டாம்.

விளையாட்டு உபகரணங்களோ, பாடநூல்களோ எதுவாகிலும் ண்பருக்கு கொடுக்கும்பொழுது நீங்கள் அவற்றின்மீது காட்டும் ன்பையும், விருப்பத்தையும் அதன் பெறுமதியையும் அவருக்கு நன்கு தெளிவுபடுத்த மறக்க வேண்டாம்.







## நண்பர் வழங்கிய பொருள் உடைந்தால், கிழிந்தால் அல்லது காணாமல் போனால்...

பாடசாலை உபகரணமோ, விளையாட்டு உபகரணமோ உடைந்தால் அல்லது காணாமல் போனால் அதனை நண்பரிடம் தெரிவித்துவிட்டு அதேபோன்றதொன்றை அல்லது அதற்கு சமனானதொன்றை முடிந்தவரையில் மிக விரைவாக நண்பருக்கு பெற்றுக்கொடுங்கள். குறிப்புப் புத்தகமொன்று காணாமல் போனால் மிகச் சிரமப்பட்டேனும் தேடி எடுத்து மீண்டும் நண்பரிடம் திருப்பிக் கொடுப்பது உங்கள் பொறுப்பாகும். குறைந்தபட்சம் பிரதி எடுத்தேனும் அந்தக் குறிப்புக் கொப்பியை மீளக் கையளிக்க வேண்டும். நண்பரிடம் பெற்ற குறிப்புப் புத்தகத்தை பல நாட்களாக உங்களிடம் வைத்துக்கொள்ளாது முடிந்த வரை விரைவாக எழுதியோ அல்லது பிரதி எடுத்துக்கொண்டோ நண்பரிடம் மீண்டும் கையளிக்க வேண்டும்.








## நண்பரின் பொருட்களை நீண்ட காலம் உங்கள் வசம் வைத்திருக்க வேண்டாம்

நண்பரின் பாடநூல்கள், பாடசாலை உபகரணங்கள், குறிப்புக் கொப்பிகள், விளையாட்டு உபகரணங்கள் என்பனவற்றை நாள், வாரம், மாதக் கணக்கில் உங்கள் வசம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. தேவையை மிக விரைவாகப் பூர்த்திசெய்து நண்பரிடம் மீளக் கையளியுங்கள். நண்பரின் மேற்குறித்த பொருட்கள் நீண்ட காலத்திற்கு உங்கள் வசம் இருந்தால் வைத்த இடம் மறந்துவிடலாம். அல்லது அவை கிழிந்து சிதைவடையலாம். காணாமலும் போய்விடலாம். இவ்வாறான அந்நியப் பொருட்களை கைவசம் வைத்திருப்பது கடனுக்குச் சமனானதாகும். எனவே, இன்று வாங்கினால் இன்றோ அல்லது நாளையோ மீண்டும் கொடுத்துவிடுங்கள்.

# து தவறானதா?



## நண்பர் வழங்கும் பாடசாலை உபகரணங்களை பாதுகாக்கவும்

உங்கள் நண்பரொருவர் குறிப்புப் புத்தகமோ, பாடநூலோ அல்லது விளையாட்டு உபகரணங்களோ உங்களுக்குத் தருவதற்குக் காரணம் உங்கள் மீதான நம்பிக்கையில் ஆகும். ஆனால், நீங்கள் அவற்றை தொலைத்துவிட்டால் உங்கள் இருவரிடையே நிலவிய அந்நியோன்ய நம்பிக்கை உடைந்துவிடும். அதனால், நம்பகத்தன்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுங்கள். அதற்காக நீங்கள் செய்ய வேண்டிய மிகச் சிறந்த பணி நண்பரிடம் பெற்றதை சிறந்த முறையில் பாதுகாப்பதாகும்.

இவ்வாறே, வாங்கிய உபகரணத்தை, மீள ஒப்படைக்கும்போது, அவற்றை வேறு நண்பர்களிடம் கொடுத்தனுப்புவதை தவிர்த்துக்கொள்ளுங்கள். குறிப்பிட்ட கொப்பி, புத்தகங்களில் கிறுக்குவதையோ, குறிப்புகள் எழுதுவதையோ தவிர்த்துக்கொள்ளுங்கள். புத்தகம் அல்லது கொப்பியின் பக்கங்கள் கழன்றிருந்தால், புத்தகத்திற்கு சேதமில்லாத வகையில் அதனை அழகுபடுத்தி குறைகளை நிவர்த்தி செய்து மீண்டும் கையளியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதிரி வினாத்தாள் (பகுதி-II) (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ..................................................

18. ஆமை, முதலை, பாம்பு போன்றவை எவ்வகைக் கூட்டத்தில் அமையும்?

 1. ஈரூடகவாழிகள் 2. பாலூட்டிகள் 3. நகருயிர்கள்

19. மூங்கில் தாவரத்தின் இளம் தளிர்களை உணவாகக் கொள்ளும் பிராணி எது?

 1. குரங்கு 2. முயல் 3. பெண்டா

20. கருப்பட்டி அல்லது பனங்கட்டி தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள் யாது?

 1. கள் 2. பனம் பழம் 3. பதநீர்

21. 'அத்தாங்கு' எனப்படுவது ஒரு;

 1. விளையாட்டு உபகரணம் 2. தையல் உபகரணம்
 3. மீன்பிடி உபகரணம்

22. உணவைப் பிடிப்பதற்காக நீண்ட சொண்டைக் கொண்ட பிராணி எது?

 1. கொக்கு 2. மீன்கொத்தி 3. வாத்து

23. மனித செயற்பாடுகளால் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தம்;

 1. சுனாமி 2. சூறாவளி 3. வறட்சி

24. நகர்ப்புறங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படுவது;

 1. காலையும் மாலையும் 2. காலையும் மதியமும்
 3. காலையும் இரவும்

25. விவசாயிகளுக்கு துணைபுரியும் பூச்சிகளில் ஒன்று;

 1. வெட்டுக்கிளி 2. கும்பிடுபூச்சி 3. இலைப்பூச்சி


**09) எல்லா வினாக்களுக்கும் சரியான விடையை கோடிட்ட இடத்தில் எழுதுக.**

01. 436 மாணவர்களை 4 பஸ்களில் சமமாக ஏற்றினால், ஒரு பஸ்ஸில் ஏற்றக்கூடிய மாணவர்கள் எத்தனை பேர்? ..................

02. 02.07.2005 அன்று பிறந்த கமலனுக்கு இவ்வருடம் 02.07.2015 அன்று எத்தனை வயது? ..............................

03. தினமும் 2 மாத்திரைகள் வீதம் 3 வேளைகள் மாத்திரைகளை எடுக்கும் ஒருவருக்கு, 5 நாட்களுக்கு எத்தனை மாத்திரைகள் தேவை? ..........................................

04. நூற்றுப்பத்தாயிரத்து அறுநூற்று ஆறு என்பதை எண்குறியில் தருக. ........................................................

05. 
நிறந்தீட்டப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்? ............................

06. ஒரு பிரதேசத்தில் வாழும் பல்வேறு மதத்தவர்களின் எண்ணிக்கையை இங்குள்ள உரு காட்டுகிறது. இதில், இந்து சமயத்தவர்களின் எண்ணிக்கை 8,200 ஆகும்.




 i. பௌத்தர்களின் எண்ணிக்கை யாது? ....................
 ii. கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை யாது? ..................
 iii. அப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகை யாது?
 ...............................




07. தம்பி தனது வீட்டு வேலைகளை மு.ப. 9:15 இற்கு செய்யத் தொடங்கி, பி.ப. 12:30 இற்கு செய்து முடித்தான் எனின், அவன் வீட்டு வேலைகளைச் செய்து முடிக்க எடுத்த நேரம் எவ்வளவு? ..............................


08. விடை தருக.

 i. ஒரு கம்பியின் நீளம் 5m 25cm. மற்றொரு கம்பியின் நீளம் 2m 50cm. மொத்தக் கம்பியின் நீளம் யாது?..............................
 ii. கம்பியின் விலை 30 எனின், மொத்தக் கம்பியின் விலை யாது? ..............................

09. 500g தேயிலையின் விலை ரூபா. 25 எனின், $2\frac{1}{2}$ kg தேயிலையின் விலை யாது? ..............................

10. ஒரு தொட்டியில் 11 350ml நீர் இருந்தது. அதில் 650ml நீர் வெளியேற்றப்பட்டது எனின், மீதியாக உள்ள நீரின் அளவு யாது? ..............................

★ **கீழே சில பழங்களினது நிறைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து கீழ்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

11. 


 i. மிகவும் குறைந்த நிறையுள்ள பொருள் யாது?................
 ii. மிகவும் கூடிய நிறையுள்ள பொருள் யாது?....................
 iii. அப்பிளின் நிறை யாது? ..............................

## புலமைப்பரிசில் விடைகள்

### மாதிரி வினாத்தாள் (பகுதி-II)

(ஜூலை 08, 15 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

**01)** 1. காலைக்காட்சி 2. சக்கரம் 3. கோழி, கொக்கு
4. சூரியனும் கிழக்கில் உதித்துவிட்டான் 5. பூமி சுற்றிச் சுழலுது
6. ஒளி 7. சூரியனை

**02)** 1. ரகசியத்தைப் பேணாதவன் 2. நிலையில்லாத் தன்மையை அடைதல்

**03)** 1. உழவுத் தொழில் 2. சிறுபொழுது

**04)** 1. அழி 2. மோர்

**05)** 1. அழகிய சுற்றாடல் 2. நான் சிற்றுண்டி கொண்டுவருகிறேன்

**06)** 1. Please give your book. 2. Where is your pen?

**07)** 1. எதுலட்ட என்ட.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **08)** | 01. 2 | 06. 3 | 11. 3 | 16. 1 | 21. 3 |
| | 02. 2 | 07. 2 | 12. 3 | 17. 3 | 22. 1 |
| | 03. 3 | 08. 1 | 13. 1 | 18. 3 | 23. 3 |
| | 04. 2 | 09. 3 | 14. 3 | 19. 3 | 24. 1 |
| | 05. 1 | 10. 1 | 15. 3 | 20. 3 | 25. 2 |

**09)** 01. 109 02. 10 03. 30 04. 110.606 05. $\frac{2}{16}$
06. i. 16,400 ii. 4,100 iii. 32,800

07. 3:15 மணித்தியாலம்

08. i. 7m 75cm ii. ரூ 232.50

09. ரூ 125 10. 700ml

11. i. மாம்பழம் ii. அப்பிள் iii. 175g iv. 100g

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோப்பி பயிர்ச்செய்கையும் ஆள்பதிகளின் செயற்பாடுகளும்

புகையிரதப் பாதைகள் அமைப்பதற்காக, இங்கிலாந்தில் வர்த்தக சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. கி.பி 1845 இல் பத்து லட்சம் தங்கப் பவுண் நிதியுடன் இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையில் நிறைவேற்றுச் சபை ஒன்று அமைக்கப்பட்டு, அதன்மூலம் பாதையை அளக்கும் பணிகள் ஆரம்பமாகியது.

இதற்கிடையில் இங்கிலாந்தில் பணமுடக்கம் ஏற்பட்டதால் கோப்பி பயிர்ச்செய்கைக்கு மரண அடி விழுந்தது. அதனால், இங்கிலாந்தில் இருந்து பணம் அனுப்புவது நிறுத்தப்பட்டது. அத்தோடு, கோப்பியின் விலை வீழ்ச்சியடைந்தது. அதனால், கடன் பெற முடியாமல் போனது. தோட்டங்களுக்காக, செலவழித்த பணத்தின் ஒரு பகுதியின் பெறுமதிக்கு அந்தத் தோட்டத்தை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. புகையிரதப் பாதையை அமைக்கும் பணியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. போக்குவரத்து நிறுவனங்களும் மூடப்பட்டன.

### ஆளுநர்களின் செயற்பாடுகள்

சேர்.ரொபர்ட் வில்மட் ஹோர்ட்டன் ஆள்பதியின் காலத்தில் இருந்து மிகவும் முன்னேற்றகரமான ஒரு நிலை தோன்றியது. பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளும் அரசியல் சீர்திருத்தமும் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. அதன்பின் வந்த ஜேம்ஸ் அலெக்ஸாண்டர் ஸ்டுவர்ட் அவர்களின் ஆட்சிக் காலத்தில் நிதி நெருக்கடி நிலை தோன்றியது. வருமானத்தைப் பெறும் பழைய முறை அரசியல் சீர்திருத்தத்தின் காரணமாக, மறைந்துபோனது. முன்வைக்கப்பட்ட புதிய முறை அதிக செலவைத் தந்தது. இதற்கு முன் அரசுக்கு பெரும் வருவாயைத் தந்த முத்துக்குளித்தல் தொழில் சில வருடங்களின் பின் பயனற்றுப் போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான
தமிழ் Mirror
ஜூலை 8 முதல்
தினசரி
தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
விலை Rs. 10/=
திங்கள் முதல் வெள்ளிவரை
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மரபுரிமையாகப் போற்றப்படும் மேரோ பிரமிட்கள்




ஆபிரிக்க கண்டத்திற்குரிய சூடான் நாட்டின் பாலைவனத்தின் நடுவில் அமைந்துள்ள பண்டைய 'மேரோ' நகரில் காணப்படும் மேரோ பிரமிட்கள், 'கறுப்பு பாரோக்களின் பிரமிட்கள்' என்றும் அழைக்கப்படுகின்றன. மிகவும் சிறப்பாகவும் திட்டமிட்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த பிரமிட்கள், எகிப்தின் கிஸாவில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற பிரமிட்களைப் போன்றதாகும். எனினும், பண்டைய எகிப்தின் ராட்சத கிஸா பிரமிட்களை போன்று, இந்த மேரோ பிரமிட்கள் உலகப் புகழ்பெறவில்லை. மாறாக, அவை கைவிடப்பட்ட நிலையில், பாழடைந்து போயுள்ளன. சூடானின் கறுப்பின அரசர்களே (பாரோக்கள்) இவற்றை நிர்மாணித்துள்ளனர். எனவேதான், இவற்றை 'கறுப்பு பாரோக்களின் பிரமிட்கள்' என்றும் அழைக்கின்றனர்.




## உலக மரபுரிமை

மேரோ புராதன நகரம் இன்று கைவிடப்பட்ட நிலையில் பாழடைந்து போயுள்ளது. இன்றளவில் சில ராட்சத பிரமிட்கள் மட்டுமே இங்கு எஞ்சியுள்ளன. சூடானின் தலைநகரிலிருந்து 125 கி.மீற்றர் தொலைவில் இந்த மேரோ நகரம் அமைந்துள்ளது. இந்த நகரை உலக மரபுரிமை தளமாக யுனெஸ்கோ பிரகடனப்படுத்தியிருந்தாலும், சுற்றுலாப் பயணிகளுக்கு மறைவான இடமாகவே இது காணப்படுகின்றத். இதற்கு காரணம்; சூடானில் நடைபெறும் உள்நாட்டு யுத்தம் ஆகும். நாட்டின் யுத்த நிலைமை காரணமாக, சூடானுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதில்லை. இதனால், அங்கு சுற்றுலாத்துறை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது.







## மேரோ ந


இந்த புராதன நகரத்தை '
என்றும் அழைப்பர். இதற்
பண்டைய காலத்தில் இந்த
நதியொன்று ஓடிக்கொண்ட
கும். இக்காலப்பகுதியில் இ
வளம்பெற்ற மேரோ நகரம்
யின் பொன் நகரமாகவும் இ
ஆனால், இன்று அந்த நதி
விட்டது. நகரின் இடிபாடுக
அப்பால், நகரைச் சூழ பா
காணப்படுகின்றது. இப்பகு
துப் பாய்ந்த அந்த நதி, நை
கிளை நதியொன்றாகும் என்
கின்றது. இதன்படி, நைல் ந
மாகக் கொண்டு பண்டைய
உருவான குஷ் பேரரசானது
அருகில் உருவான முதல் ந
பெருமையினைப் பெறுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேரோ நகரம்


இந்த புராதன நகரத்தை 'மேரோ தீவு' என்றும் அழைப்பர். இதற்கு காரணம், பண்டைய காலத்தில் இந்த நகரைச் சூழ நதியொன்று ஓடிக்கொண்டிருந்தமையாகும். இக்காலப்பகுதியில் இந்த நதியினால் வளம்பெற்ற மேரோ நகரம், குஷ் ராசதானியின் பொன் நகரமாகவும் இருந்துள்ளது. ஆனால், இன்று அந்த நதி வற்றிப்போய் விட்டது. நகரின் இடிபாடுகளுக்கு அப்பால், நகரைச் சூழ பாலைவனமே காணப்படுகின்றது. இப்பகுதியை ஊடறுத்துப் பாய்ந்த அந்த நதி, நைல் நதியின் கிளை நதியொன்றாகும் என்றே கருதப்படுகின்றது. இதன்படி, நைல் நதியினை மையமாகக் கொண்டு பண்டைய காலத்தில் உருவான குஷ் பேரரசானது, நைல் நதிக்கு அருகில் உருவான முதல் நாகரிகம் என்ற பெருமையினைப் பெறுகின்றது.



## பிரமிட்கள்

மேரோ பிரமிட்கள் 20 அடி மற்றும் 100 அடி உயரம் வரையில் காணப்படுகின்றன. கி.மு.720 முதல் 300 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியிலேயே இந்த பிரமிட்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கிழக்கு நோக்கியே இவற்றின் வாசல் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. சூரியக் கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

"இவை எகிப்தின் பிரமிட்கள் போன்றவையல்ல. ஏனெனில், எகிப்திய பிரமிட்களில் பாரோக்களின் சர்வாதிகாரத்தன்மையினைக் காணமுடியும். ஆனால், இவற்றில் அவ்வாறான தன்மையினைக் காணமுடியாது" என்று எரிக் லெப்ரோகன் எனும் புகைப்படக் கலைஞர் கூறுகின்றார்.



## யுனெஸ்கோவின் கருத்து

"குஷ் ராசதானியின் அதிகாரப் பலத்தினை வெளிப்படுத்தும் சான்றாக மேரோ பிரமிட்களையும் அவற்றின் இடிபாடுகளையும் சுட்டிக்காட்ட முடியும்" என்று யுனெஸ்கோ அமைப்பு கூறுகின்றது. இதனால்தான் யுனெஸ்கோ அமைப்பானது, இந்த பிரமிட்களை உலக மரபுரிமையாக பிரகடனம் செய்துள்ளது. கி.மு. 8 முதல் 4 வரையான காலப்பகுதியில் அதிகாரம் பொருந்திய ராஜ்யமாக மேரோ நகரம் நிலவியதாக தொல்லியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## தொல்லியல் செயற்பாடுகள்

1989 ஆம் ஆண்டு சூடான் ஜனாதிபதியான அல் பஷீர் அவர்களின் அரசாங்கத்தினால் சூடானின் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இவ்வாறான பகுதிகளைப் பாதுகாக்க முடியவில்லை. சூடானின் தொல்லியல் விடயங்களுக்கு மட்டுமன்றி, அருங்காட்சியக பொருட்களைப் பாதுகாக்கவும் கட்டார் நாடே சூடானுக்கு உதவுகின்றது.


## ஆக்கிரமிப்பு

பேரரசன் மகா அலெக்சாண்டர் கி.பி. 322 இல் மேரோ நகரினை ஆக்கிரமிப்பு செய்ய வந்துள்ளார். எனினும், மேரோ படையினரின் பலத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அலெக்சாண்டரின் படைகள் பின்வாங்கின. மேரோ படையினர் ரோமானிய படையினரையும் தோற்கடித்தனர். அன்றைய காலப்பகுதியில் ரோமின் ஆக்கிரமிப்பு பகுதியாகவே மேரோ நகரம் காணப்பட்டது. ரோமின் ஒகஸ்டஸ் பேரரசனின் செப்புச் சிலையின் தலைப் பகுதி மேரோ இடிபாடுகளின் மத்தியில் கண்டுபிடிக்கப்பட்டு, அது தற்போது பிரித்தானிய அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

-பிரியா



**கேள்வி:** எஸ்பெஸ்ட்டஸ் கூரைத்தகடுகளைப் பயன்படுத்தக்கூடாது என்று கூறப்படுவது ஏன்?




**பதில்:** எஸ்பெஸ்ட்டஸ் கூரைத் தகடுகள் காலப்போக்கில் வெடிப்புக்குள்ளாகி அதிலிருந்து எஸ்பெஸ்ட்டஸ் நார்த் துகள்கள் கொட்டத் தொடங்கும். அத்துடன், கூரைக்கு ஏற்றவாறு தகட்டினை வெட்டும்போதும் நார்த் துகள்கள் வெளியாகின்றன. இவை அனைத்தும் காற்றுடன் கலந்து சுவாசத்தினூடாக நுரையீரலுக்குள் சென்றுவிடுகின்றன. இதனால், நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் மட்டுமன்றி, புற்றுநோயும் ஏற்படக்கூடும். இந்த துகள்கள் உணவில் கலந்தால், அந்த உணவை உண்பதன்மூலம் உணவுப் பாதைக்குள் அவை சென்றுவிடுகின்றன. இதனாலும், கோளாறுகள் ஏற்படக்கூடும். அதுமட்டுமன்றி, சிறுநீரகங்களுக்கும் பாதிப்பு ஏற்படும். இவை அனைத்தும் எஸ்பெஸ்ட்டஸ் நார்த் துகள்களினால் ஏற்படும் நீண்டகால விளைவுகளாகும்.






**கேள்வி:** போதியளவு நேரம் நித்திரை செய்யாதவர்களின் உடல் பருமனாக இருப்பது ஏன்?

**பதில்:** நித்திரை என்பது, உடலுக்கு ஓய்வு வழங்கும் ஓர் உடற்தொழிற்பாடாகும். ஒரு நாளில் உடலில் இழக்கப்படும் சக்தியை மீட்கும் ஒரு செயற்பாடாகவும் இது அமைகின்றது. உடலின் மறுசீரமைப்பு பணிகளும் நித்திரையின்போதே நிகழ்கின்றன. இதற்கான சக்தி, உடலில் சேமிக்கப்பட்டுள்ள கொழுப்பின் மூலமே பெறப்படுகின்றது. நித்திரை தவிர்க்கப்படும்போது, மன அழுத்தம் ஏற்பட்டு கொழுப்பினை சக்தியாக மாற்றும் செயற்பாடு மந்தகதியில் இடம்பெறுகின்றது. இதனால், உடலில் கொழுப்பு சேமிக்கப்படும் செயற்பாடு அதிகமாகி உடல் பருமனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடி பார்த்து வியப்படைந்த விலங்குகள்



கண்ணாடியில் தனது பிரதிபிம்பத்தைப் பார்த்த இந்த கொரில்லாவின் வெளிப்பாடுகள் மிகவும் சுவாரஸ்யமானவை

**வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகள், முகம் பார்க்கும் கண்ணாடிகளில் தமது உருவங்களைப் பார்த்து வியப்படையும் காட்சிகள் எமக்கு புதியதல்ல. ஆனால், காட்டில் வாழும் வனவிலங்குகள் இவ்வாறு முகம்பார்க்கும் கண்ணாடியில் தம்மைப் பார்த்தால் எப்படி இருக்கும்...?**

இது தொடர்பில் ஒரு பரிசோதனையை மேற்கொள்ள புகழ்பெற்ற பிரான்ஸிய புகைப்படக் கலைஞரான சேவியர் ஹூபேர்ட் ப்ரியரோ என்பவர் நடவடிக்கை எடுத்திருந்தார். அத்துடன், காட்டு விலங்குகள் கண்ணாடியில் தமது உருவங் களைப் பார்க்கும்போது, வெளிப்படுத்தும் உணர்வு களையும் அவற்றின் செயல் களையும்கூட ஹூபேர்ட் புகைப்படம் பிடித்திருந்தார்.

## புகைப்படப்பிடிப்பு

புகைப்படக் கலைஞரான ஹூபேர்ட், வனவிலங்குகளை புகைப்படம் எடுப்பதற்காகவே ஆபிரிக்காவின் கெபோன் நாட்டிற்கு சென்றிருந்தார். இந்த சுற்றுப்பயணத்தில் அவரது மனைவியும் இணைந்துகொண்டார். அவர்கள் கெபோன் நாட்டு வன அதிகாரிகளின் உதவியுடன் வனவிலங்குகள் பரவலாக உள்ள காட்டுப் பகுதியொன்றில் பெரிய அளவிலான கண்ணாடி ஒன்றினைப் பொருத்தினர். அதில் சென்சர்களையும் பொருத்தினர். விலங்கு ஒன்று கண்ணாடிக்கு அருகில் வந்ததும், அங்கு பொருத்தப் பட்டுள்ள கெமராக்கள் இயங்கி புகைப்படம் எடுக்கப்படுவ துடன், வீடியோ காட்சிகளும் பதிவாக ஆரம்பிக்கும்.






## கண்ணாடிப் பரிசோதனை

ஒரு விலங்கு கண்ணாடியில் தனது பிரதிபிம்பத்தினைப் பார்க்கும்போது, வெளிப்படுத்தும் நடத்தைகளை ஆய்வுக்குட்படுத்தும் முறையே 'கண்ணாடிப் பரிசோதனை' (mirror test) எனப்படுகின்றது.

மனிதர்களாகிய எமக்கு கண்ணாடி என்பது புதுமையான பொருளன்று. ஆனால், வனவிலங்குகள் கண்ணாடிகள் தொடர்பில் வெளிப்படுத்தும் உணர்வுகள் மிகவும் வியப்பானவை. கண்ணாடியில் தோன்றும் தமது பிரதிபிம்பத்தினைக்கூட அவை தமது எதிரிகளின் உருவங்கள் என்றே கருதுகின்றன என்று சேவியர் ஹூபேர்ட் தனது பரிசோதனை குறித்து தெளிவுபடுத்தும்போது குறிப்பிட்டிருந்தார்.

## விலங்குகளின் வெளிப்பாடுகள்



விலங்குகளின் தாக்குதலுக்கு இலக்காகாதவாறு பாதுகாப்பான பெட்டிகளுக்குள் கெமராக்கள் வைக்கப்பட்டிருந்தன

விலங்குகளின் நடமாட்டம் அதிகம் காணப்படும் இடமொன்றிலேயே இந்த கண்ணாடி பொருத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, முதலில் அங்கு வந்த ராட்சத ஆபிரிக்க யானையொன்று கண்ணாடியைப் பார்த்துக் குழம்பிப்போனது. கண்ணாடியில் தெரிவது தனது எதிரி என்று நினைத்து பிளிறத் தொடங்கியது. தூசு பறக்க கால்களை நிலத்தில் தேய்த்த அந்த யானை, பின்னர் பிளிறிக்கொண்டே அவ்விடத்தை விட்டு அகன்றது. அடுத்ததாக கண்ணாடி முன் வந்த பெரிய கொரில்லாவொன்று, கண்ணாடியில் தோன்றிய பிரதிபிம்பத்தை தனது எதிரி என்று கருதி, அதனுடன் சண்டைக்கு தயாரானது. ஆனால், அவ்வழியால் சென்ற சிம்பன்சிக் குரங்குகள் கூட்டமோ, கண்ணாடியைப் பார்த்து குதூகலம் அடைந்தன. சிறுத்தைகள் சில தமது பிரதிபிம்பத்தைப் பார்த்து பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தின. ஒரு சிறுத்தை தனது பிரதிபிம்பத்தைக் கண்டதும், அது தனது எதிரியாக இருக்கும் என நினைத்து சண்டைக்குத் தயாரானது.

-(இ




## இலவசமாக கராத்தே பயிற்சிகள்

### இருபாலாருக்கும் வாய்ப்பு

இலவசமாக கராத்தே பயிற்சிகளை பெற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கு Institute for martial arts நிறுவனம் அந்த வாய்ப்பினை வழங்க முன்வந்துள்ளது. மேற்படி நிறுவனத்தின் 26 வருட கால நிறைவை முன்னிட்டு ஆண், பெண் இருபாலாருக்கும் 6 மாதகால இலவச கராத்தே பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (பெண்களுக்கு பெண் பயிற்சியாளர்கள்). கராத்தே மட்டுமன்றி Nanchaku lock technic's preasure points என்பனவும் இப்பயிற்சியில் அடங்கும்.

மேற்படி கராத்தே பயிற்சிகள் புதன்தோறும் இல-49, பெட்ரிக்கா வீதி, வெள்ளவத்தை. என்ற முகவரியில் நடைபெறவுள்ளன. இந்த பயிற்சிகளை இலவசமாக பெற விரும்புவோர் 0777302272 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். பதிவு செய்யும் முதல் 50 மாணவ, மாணவிகளுக்கே இந்த வாய்ப்பு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பயணக் கட்டுரைகள் எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்...?

பத்திரிகைகளில் பயணக் கட்டுரை எழுதுதல் என்பது ஒரு சிறப்பம்சமாகும். அதனை ஒரு தனிக்கலை என்றும் கூறலாம். குறித்த ஊடகத்தைச் சேர்ந்த ஊடகவியலாளரோ அல்லது சிறந்தவொரு எழுத்தாளரோ வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது தாம் அந்த நாடுகளில் கண்டவற்றை, அனுபவித்தவற்றை சுவாரஸ்யம் கலந்து வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதே பயணக் கட்டுரை என்ற வகைக்குள் அடங்கும். ஆரம்பத்திலிருந்து 90 ஆம் ஆண்டுகள்வரை இவ்வகை பயணக் கட்டுரைகள் எழுதுவது பரவலாக இருந்தபோதிலும், அண்மைக் காலங்களில் இவ்வாறு பயணக் கட்டுரைகள் எழுதுவது அருகி வருவதையே காண முடிகின்றது.

பயணக் கட்டுரை எழுதுவோர் அதற்குண்டான சில அடிப்படைகளை, வரையறைகளை சரிவர அறிந்து அதன்படி கட்டுரையை எழுதாமையின் காரணத்தால் வாசகர்களும் இதில் மனம் ஒன்றிவிடுவதும் குறைந்து காணப்படுகின்றது. எனவே, பயணக் கட்டுரை என்பது எத்தகைய குணாம்சங்களை, வரையறைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதை சற்றுப் பார்ப்பது நல்லது. அதாவது, பயணக் கட்டுரை எழுதுபவர் எப்போதும் தன்நிலையிலிருந்து எழுதுகின்றபோதிலும், இயன்றவரையில் தன்னைப் பற்றியே எழுதாமல் தான் காண்கின்றவற்றை,



களிப்புற்றவற்றை, கவர்ந்தவற்றை தெளிவுபடுத்துவதற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது முக்கியமாகும். அதுமட்டுமன்றி, வெறும் பொழுது போக்கு அம்சங்களை மட்டுமே குறிப்பிடாமல் அறிவுசார்ந்த, சமூகம் சார்ந்த விடயங்களையும் தொட்டுக்காட்ட மறக்கக்கூடாது.

மேலும் பயணக் கட்டுரையானது, பாடம் நடத்துவது போன்றவோர் பிரம்மையை வாசகர்களுக்குக் கொடுக்கவும் கூடாது. ஒரே விடயத்தைப் பலரும் பல கோணங்களில் பார்க்கக்கூடிய தன்மைகள் உள்ளன. அந்த தன்மையானது, கட்டுரையாளரின் பார்வையில் மிகவும் ஆழமானதாக இருக்கவேண்டும். கட்டுரையாளரின் எழுத்து நடையானது, வாசகனுக்கு அடிப்படையில் மூன்று விதமான திருப்தியைக் கொடுக்க வேண்டும்.

ஒன்று: தானும் அந்த நாட்டை அல்லது அந்த இடத்தை நேரில் பார்க்கச் செல்ல வேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்த வேண்டும்.

இரண்டு: தானும் அந்த நாட்டை அந்த இடத்தை பார்த்ததைப் போன்ற ஒரு திருப்தியை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

மூன்று: தனக்குத் தேவையான அல்லது அறியாத தகவல்களைத் திரட்டிக்கொண்ட திருப்தியை ஏற்படுத்த வேண்டும்.

இந்த மூன்றுவிதமான உணர்வுகளையும் ஏற்படுத்தும் பயணக் கட்டுரையை வழங்கக்கூடிய திறமை, பக்குவம் பயணக்கட்டுரையை வழங்குபவரிடம் இருத்தல் வேண்டும். வெளிநாட்டிற்குப் பயணம் செய்கின்றபோது, அங்குள்ளவற்றை வெறுமனே கலாதியாகப் பார்த்துவிட்டு, ரசித்துவிட்டு அதனை எவ்வித கட்டுக்கோப்பும் இன்றி பயணக்கட்டுரையாக எழுதினால், அது முழுமையான பயணக்கட்டுரையாக அமையாது. அது வெறும் வர்ணனையாகவே அமையும். அதுமட்டுமன்றி, பயணத்தின் மூலம் கண்டவற்றையும், அறிந்தவற்றையும் வழங்குவதற்குப் பதிலாக கட்டுரையாளர் தனது பெருமைகளை கூறிக்கொள்ளும் முறையும் தவறானதாகும்.



பயணக் கட்டுரை எனும் பெயரில் தம்மைப் பற்றி பீற்றிக்கொள்வதானது, வாசகர்களுக்கு சலிப்பை ஏற்படுத்துமேயன்றி, தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்ட மாட்டாது. எனவே, கட்டுரையாளர் தான் பார்த்தவற்றை, அறிந்தவற்றை சுவாரஸ்யமான எழுத்து நடையில் வழங்க வேண்டியதுடன், தன் பார்வைக் கண்களை வாசகர்களின் பார்வைக் கண்களாக கருதும் விதமாக கட்டுரையை எழுதினால் அதுவே வெற்றியாக அமையும். புகைப்படங்களை எடுக்கும்போதும் அவற்றில் கட்டுரையாளர் தன் முகத்தைக் காட்டுவதற்குப் பதிலாக தான் கண்ட காட்சியை, அபூர்வத்தைக் காட்டுவதற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். இத்தகைய வரையறைகளை, கட்டுக்கோப்புக்களை கொண்டதே சரியான ஒரு பயணக் கட்டுரையாக அமையும்.

(தொடரும்)

-ரிஷபன்



வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் 8GB Pen Drive பரிசு!!



4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருளும் பென்டிரைவ் உடன் இலவசமாக வழங்கப்படும்.

பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'ThooVaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'ThooVaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

* சரியான விடையை அனுப்புவோரில் அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive & Software பரிசாக வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive போட்டி
(15.07.2015)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'ThooVaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F ThooVaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்

(இச்சேவை முற்றிலும் இலவசம்)

Sponsored:
MYLOOK.LK
FB/Web: MyLook.lk
Twitter: MyLookLK
(The Online Women Clothing Store)

இவ்வார கூப்பன்:
17.06.2015

விடை: ..........
பெயர்: ..........
முகவரி: ..........
தொ.பே.இல: ..........
பாடசாலை: ..........
தரம்: ..........
..........
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் ரவிக்கும் அம்மாவுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**රවි:** **අම්මා! මට හොඳ සිංහල පන්තියකට යන්න ඕනේ.**
அம்மா! மட்ட ஹொந்த சிங்ஹல பந்தியகட்ட யன்ன ஓனே.
ரவி: **அம்மா! எனக்கு நல்லதொரு சிங்கள வகுப்புக்குப் போக வேண்டும்.**

**අම්මා:** **ඇයි පුතා? ඔයාට සිංහල අමාරුද?**
எய் புதா? ஒயாட்ட சிங்ஹல அமாருத?
அம்மா: **ஏன் மகன்? உங்களுக்கு சிங்களம் கஷ்டமா?**

**රවි:** **ඔව් අම්මා. මට හැමදාම ලකුණු අඩුයි.**
ஒவ் அம்மா. மட்ட ஹெமதாம லகுணு அடுய்.
ரவி: **ஆம் அம்மா. எனக்கு எந்தநாளும் புள்ளிகள் குறைவு.**

**අම්මා:** **පාසලේ උගන්වනවා තේරෙන්නේ නැද්ද?**
பாசலே உகன்வனவா தேரென்னே நெத்த?
அம்மா: **பாடசாலையில் கற்பிப்பது விளங்கவில்லையா?**

**රවි:** **තේරෙනවා අඩුයි අම්මේ. සිංහල දෙවන බසනේ.**
தேரெனவா அடுய் அம்ம. சிங்ஹல தெவன பஸனே.
ரவி: **விளங்குவது குறைவு அம்மா. சிங்களம் இரண்டாவது மொழிதானே.**

**අම්මා:** **හොඳට උගන්වන පන්තියක් තියෙනවාද?**
ஹொந்தட்ட உகன்வன பந்தியக் தியெனவாத?
அம்மா: **நன்றாகப் படிப்பிக்கின்ற வகுப்பொன்று இருக்கிறதா?**

**රවි:** **ඔව් අම්මා, රාමු යනවා හොඳ පන්තියකට.**
ஒவ் அம்மா, ராமு யன்வா ஹொந்த பந்தியகட்ட.
ரவி: **ஆம் அம்மா, ராமு நல்லதொரு வகுப்புக்குப் போகின்றான்.**

**අම්මා:** **ඒක කොහේද තියෙන්නේ?**
ஏக கொஹேத தியென்னே?
அம்மா: **அது எங்கே இருக்கிறது?**

**රවි:** **රාමුලගේ ගේ ළඟ. එයා හොඳට ලකුණු ගන්නවා.**
ராமுலகே கே லங்க. எயா ஹொந்தட்ட லகுணு கன்னவா.
ரவி: **ராமுவின் வீட்டுக்கு அருகில். அவன் நல்ல புள்ளிகள் எடுக்கிறான்.**

**අම්මා:** **ඉතින් ඒකට අලුතෙන් ළමයි ගන්නවද?**
இதின் ஏகட்ட அலுதென் லமய் கன்னவத?
அம்மா: **இனி, அதற்கு புதிய பிள்ளைகளை எடுக்கின்றனரா?**

**රවි:** **ඔව්. ඒ මිස් හොඳට කියල දෙනවලු.**
ஒவ். ஏ மிஸ் ஹொந்தட்ட கியல தெனவலு.
ரவி: **ஆம். அந்த டீச்சர் நன்றாக சொல்லிக் கொடுக்கிறாராம்.**

**අම්මා:** **එහෙනම් අපි ගිහින් මිස්ව හමුවෙලා කතා කරමු.**
எஹெனம் அப்பி கிஹின் மிஸ்வ ஹமுவெலா கதா கறமு.
அம்மா: **அப்படியென்றால் நாம் போய் டீச்சரை சந்தித்துப் பேசுவோம்.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ඔයාට ............ අමාරුද?
2. රාමුලගේ ගේ ............
3. හමුවෙලා ............ කරමු.




'**Be**' எனும் வினைச்சொல்லை மூல வினைச்சொல்லாக (Stem Verb) கையாண்டு, **will** சகிதம் அமைக்கப்பட்ட எதிர்கால தனி வாக்கியங்களை மேலும் இங்கே அவதானிப்போம்.

அ) Will Ragujan be in office tomorrow?
ரகுஜன் நாளை அலுவலகத்தில் இருப்பானா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

ஆ) Yes, he will be in office tomorrow.
ஆம், அவன் நாளை அலுவலகத்தில் இருப்பான்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

இ) No, he won't be in office tomorrow.
இல்லை, அவன் நாளை அலுவலகத்தில் இருக்கமாட்டான்.
(எதிர்மறை வாக்கியம்-Negative Sentence)

ஈ) Will Sumathi be in school tomorrow?
சுமதி நாளை பாடசாலையில் இருப்பாளா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

உ) Yes, she will be in school tomorrow.
ஆம், அவள் நாளை பாடசாலையில் இருப்பாள்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஊ) No, she won't be in school tomorrow.
இல்லை, அவள் நாளை பாடசாலையில் இருக்கமாட்டாள்.
(எதிர்மறை வாக்கியம்-Negative Sentence)

எ) Will the dog be at home tomorrow?
நாய் நாளை வீட்டில் இருக்குமா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

ஏ) Yes, it will be at home tomorrrow.
ஆம், அது நாளை வீட்டில் இருக்கும்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஐ) No, it won't be at home tomorrow.
இல்லை, அது நாளை வீட்டில் இருக்கமாட்டாது.
(எதிர்மறை வாக்கியம்-Negative Sentence)

அ) Will your father be in office tomorrow?
உனது தந்தை நாளை அலுவலகத்தில் இருப்பாரா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

ஆ) Yes, he will be in office tomorrow.
ஆம், அவர் நாளை அலுவலகத்தில் இருப்பார்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

இ) No, he won't be in office tomorrow.
இல்லை, அவர் நாளை அலுவலகத்தில் இருக்கமாட்டார்.
(எதிர்மறை வாக்கியம்-Negative Sentence)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

* "புருட்டஸ் நீயுமா?" என்று கூறி உயிர்நீத்த உலக கதாநாயகர் யார்?

ஜூலியஸ் சீசர். சேக்ஸ்பியரின் ஜூசலியர் சீசர் வரலாற்று நாடக பாத்திரம்

* வீரசூடாமணி, தேசபந்து ஆகிய கௌரவப் பட்டங்கள் எத்தகைய சேவை செய்தவர்களுக்கு வழங்கப்படுகின்றது?



i. உயிராபத்தைப்பொருட்படுத்தாது ஆற்றும் செயல்களுக்கு வழங்கப்படும் கௌரவ விருது வீரசூடாமணி விருது
ii. நாட்டிற்காக ஆற்றிய தொண்டிற்காக வழங்கப்படும் விருது தேசபந்து விருது



* கிரீன்லாந்து நாட்டின் தலைநகர் எது?

ரெக்ஜேவிக்

* சர்வதேச நீதிமன்றம் எங்கிருந்து செயல்படுகின்றது?

நெதர்லாந்து - ஹேக் நகரில் இருந்து

* பின்லாந்து நாட்டிற்குரிய சிறப்புப் பெயர் என்ன? அதன் தலைநகர் யாது?



ஏரிகளின் நாடு
(தலைநகர் - ஹெல்சிங்கி)

* நோபுரு காஷிமா எனும் ஜப்பானிய அறிஞருக்கு இந்தியாவின் விருதான 'பத்மஸ்ரீ' விருது எதற்காக வழங்கப்பட்டது?

இவர் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டிற்காக வழங்கப்பட்டது



* சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள பதவியிலுள்ள உலக நாட்டுத் தலைவர் ஒருவரை அண்மையில் தென் ஆபிரிக்காவில் வைத்து கைது செய்ய வேண்டுமென உலக நாடுகள் வேண்டுகோள் விடுத்தன. அவர் எந்த நாட்டுத் தலைவர்?

சூடான் நாட்டு ஜனாதிபதி உமர் அல் பசீர்

* உலகில் மிகவும் நீளமான சுரங்கப் புகையிரதப்பாதை எங்கேயுள்ளது? அதன் நீளம் என்ன?

சுவிற்சர்லாந்தின் அல்ப்ஸ் மலைப்பகுதியில் உள்ளது. இது 34 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டது...

* இலங்கையில் எத்தனை வகையான தேர்தல்கள் நடாத்தப்படுகின்றன?



5 வகைத் தேர்தல்கள்
i. ஜனாதிபதித் தேர்தல் ii. நாடாளுமன்றத் தேர்தல்
iii. உள்ளூராட்சி சபைத் தேர்தல்
iv. கருத்துக்கணிப்பு தேர்தல் v. மாகாண சபைத் தேர்தல்

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 6/15
எம்.டி.எம்.ரிஸ்மி, தம்மல்லாவ, கள்-எலிய.



அங். இல: 6/16
ஜுமைல், தாருஸ்ஸலாம் வீதி, ஓட்டமாவடி - 01.



அங். இல: 6/17
என்.எஃப்.நுஸ்றா, பிரதான வீதி, தோப்பூர்-04.



அங். இல: 6/18
எம்.எஃப்.அசீரா, உடதலவின்ன, மடிகே.



அங். இல: 6/19
மூ.இ.ஹில்மியா, வாடி வீட்டு வீதி, கல்முனை-01.



அங். இல: 6/20
பாஸ்கரன் நிலோச்சன், அரசடி லேன், மானிப்பாய்.



அங். இல: 6/21
கே.ஜே.சிரஞ்ஜீவி, மெத்சாரா உயன, பொரளை.



அங். இல: 6/22
என்.எஃப்.றிஸ்னா, பிரதான வீதி, தோப்பூர்-04.

# எதியோப்பியா

ஆபிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள எதியோப்பியா நாடு அனைத்து திசைகளிலும் பல நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. கிரேக்க மொழியில் முகம் அல்லது 'எதியோ' 'பியா' என்ற அர்த்தத்தில் இந்நாட்டிற்குப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் அரச நிர்வாக ஆட்சி மு[illegible]யக் கொண்ட இந்நாடு எந்தவொரு அந்நிய நாட்டின் அ[illegible]த்திற்கும் உட்படவில்லை. இன்றும் அந்நாட்டில் பல்வேறு மதத்தினர் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசுவைப் பற்றிய வியக்கத்தக்க செய்திகள்

பசுக்களுக்கு மேல் தாடையில் பற்கள் கிடையாது. ஒரு ஆரோக்கியமான பசு மாடு தனது வாழ்நாளில் சுமார் 200,000 குவளைகள் பால் கொடுக்கின்றது. பசு மாட்டுக்கு நான்கு வயிறுகள் உள்ளன. அவை ருமென், ரெடிகுலம், ஓமசம், அபோசம் என்பனவாகும். ருமென் எனப்படும் முதல் குடல் அளவில் பெரியதாகவும், அசைபோடும் உணவை நொதிக்கச் செய்யும் 'நொதித்தல்' அறையாகவும் செயல்படுகிறது. கடைசி வயிறான அபோசம் அமைப்பிலும், செயல்பாட்டிலும் மனித குடல் போல் செயல்படுகின்றது.

பசு மாட்டின் சராசரி ஆயுட்காலம் ஏழு ஆண்டுகள். ஆனால், கட்டி வளர்க்காமல் இயற்கையில் சுற்றித்திரிபவை பதினைந்து ஆண்டுகள் வரை வாழுமாம்.

உலகில் அதிக வாழ்நாட்கள் வாழ்ந்த பசுவாக (Big Bertha) பிக் பெர்த்தா என்ற மாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தனது 48 ஆவது வயதை 1993 இல் பூர்த்தி செய்தது. இது 39 கன்றுகளை ஈன்றிருந்தது. பசுக்களின் சராசரி உயரம் சுமார் 55 அங்குலங்கள் ஆகும். ஆனால், டெக்ஸ்டர்ஸ் (Dexters) எனப்படும் வகை 36 முதல் 42 அங்குலங்கள் வரை வளரக்கூடியவையாகும். அந்த இனத்தை சேர்ந்த ஸ்வாலோ (Swallow) என்றழைக்கப்பட்ட மாடுதான் உலகின் மிக உயரம் குறைந்த மாடாக கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. அதன் உயரம் 33 அங்குலங்கள் ஆகும்.

# இது இப்படி...!

- வருடம்தோறும் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்யும் நாடு;
  **சுவிட்ஸர்லாந்து**

- உலகின் தட்டையான, சமதளமான நாடு;
  **மாலைதீவு**



- பிளாஸ்டிக் பண நோட்டுக்களை அறிமுகப்படுத்திய நாடு;
  **அவுஸ்திரேலியா**

- கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை அறிமுகப்படுத்திய நாடு;
  **நோர்வே**



- பூச்சியத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய நாடு;
  **இந்தியா**

- திருமணத்தின்போது, தேசிய கீதம் பாடப்படும் நாடு;
  **நைஜீரியா**

- பத்து வருடங்களுக்கு ஒருமுறை பிறந்தநாளைக் கொண்டாடும் நாட்டினர்;
  **சீனர்கள்**



ஜே.எம்.ஷுஜப்,
அல்-உஸ்வதுல் ஹசனாஹ் அரபுக் கல்., குருணாகல்.

# நாடுகளின் முன்னைய பெயர்கள்




| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| 01. கம்பூச்சியா | - கம்போடியா |
| 02. பெர்ஷியா | - ஈரான் |
| 03. கோல்ட்கொஸ்ட் | - கானா |
| 04. பர்மா | - மியன்மார் |
| 05. சீயம் | - தாய்லாந்து |
| 06. சிலோன் | - இலங்கை |
| 07. எகிப்து | - ஐக்கிய அரபு குடியரசு |
| 08. மலாயா | - மலேசியா |
| 09. நிப்போன் | - ஜப்பான் |
| 10. கொஸ்தாந்து நோபிள் | - ஸ்தான்புல் |



அ.அப்னீரத் அஹமட்,
மட்/அல்ஹிறா ம.வித்., காத்தான்குடி.

# முள்ளுக்கும் திறமை உண்டு



விவசாயி ஒருவருக்கு மலை அருகே தோட்டம் ஒன்று இருந்தது. அதில் கத்தரிச் செடிகளை பயிர் செய்து இருந்தார். கத்தரிச் செடிகளுக்கு இடையே முளைக்கும் களைகள், முட்செடிகள் ஆகியவற்றை பிடுங்கி எடுத்து கத்தரிகளை கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தார்.

ஒருநாள் விவசாயி கத்தரிச் செடிகளுக்கு இடையே வளர்ந்திருந்த முட்செடி ஒன்றைப் பிடுங்கி எறிந்தார். உடனே அந்த செடி கண்ணீர் விட்டு அழுதது.

விவ்சாயி அந்த முட்செடியிடம் சென்று ஏன் கண்ணீர்விட்டு அழுகிறாய்....? என்று கேட்டார். அதற்கு முட்செடி "நான்தான் யாருக்குமே பயன்படப் போவதில்லையே. எந்தவித திறமையும் இல்லாத என்னை ஏன் கடவுள் படைத்தார்'' என்று கூறி வருத்தப்பட்டது. அதற்கு விவசாயி "கடவுள் யாரையும் காரணம் இல்லாமல் படைப்பதில்லை. எல்லோருக்கும் திறமையும், பலத்தையும் கொடுத்தே இருக்கிறார். அதை நாம்தான் கண்டுபிடித்து பயன்படுத்த வேண்டும்'' என்று கூறினார்.

"என்ன திறமை இருக்கப் போகிறது என்னிடம். நானோ முட்செடி பிறரைக் காயப்படுத்துவேனே தவிர, வேறு யாருக்கும் உதவியாக இருக்கமாட்டேன்'' என்று தன்னைக் குறைத்துப் பேசி அழுதது. மறுநாள் விவசாயி தன் தோட்டத்திலிருந்து பிடுங்கி எறிந்த முட்செடிகளை எல்லாம் ஒன்றுசேர்த்து அவற்றால் தோட்டத்தைச் சுற்றி வேலி ஒன்றை அமைத்தார்.

பின்பு அந்த முட்செடியிடம் சென்று, "நீ முட்செடிதான். ஆனால், உன்னிடம் திறமையும், பலமும் இருக்கிறது. அதனால்தான் இன்று இந்த தோட்டத்தையே பாதுகாக்கும் காவல்கார வேலியாக உயர்ந்திருக்கிறாய்'' என்று விவசாயி பெருமையாகக் கூறினார்.


கடவுள் படைத்த எல்லா உயிர்களுக்கும் திறமையும் பலமும் உண்டு என்பதை அப்போதுதான் உணர்ந்தது முட்செடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A படத்தை அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக




## குறுக்கெழுத்துப் போட்டி இல. 145



### மேலிருந்து கீழ்

01. சுகம் தரும்.
02. ஆகாயம்.
03. வீட்டு வளர்ப்புப் பிராணி. (தலைகீழ்)
05. வெற்றி.
07. திராட்சை/ வாழை என்பவற்றின் காய்களின் தொகுதி.
09. (இந்து சமயத்தில்) இறந்தவருக்காக நடாத்தப்படும் சடங்கு.
11. (போர் போன்றவற்றால்) தனது வாழிடத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழ்பவர். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்


01. சிறிய விரல்.
03. பெண்- எதிர்ப்பால் சொல்.
04. மரம்.
05. சத்துமிக்க இலை வகை.
06. 'கீற்று' என்றும் அர்த்தப்படும்.
08. வெட்டுவதற்குப் பயன்படும்.
10. தென்னையின் இலை இவ்வாறு அழைக்கப்படும்.
11. விருந்தினர்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.144 விடைகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | ப் | 2 பா | த் | 3 தி | |
| ம் | | ட | | றை | 4 ப |
| 5 பா | ஞ் | சா | லி | | னை |
| ஷ | | லை | | 6 வை | |
| ண | 7 ஆ | | 8 ம | கா | ன் |
| | 9 வீ | ழி | | சி | 10 ஊ |





## முட்டைகளின் மொத்த எண்ணிக்கையுடன் இணைக்க





## வழி காட்டுங்கள்




## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து, படத்திற்குரிய சொல்லைப் பெறுக




## அறிவுக்கு விருந்து (01.07.2015) விடைகள்




| | |
|---|---|
| nep pen | kosob books |
| serare eraser | sdek desk |
| kabpccak backpack | nicepl pencil |
| tenookbo notebook | bunloxhc lunchbox |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காத்தான்குடி அல்-இக்பால் பாலர் பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பொறியியலாளர் சிப்லி பாறூக் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான சீருடைகளை வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (ஜுனைட் எம்.பஹ்த்)

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



தர்கா நகரைச் சேர்ந்த மொஹமட் தல்வான்-பாத்திமா ரிஸானா, தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ஸல்மா, தனது எட்டாவது பிறந்தநாளை 16.07.2015 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

ஹிஜ்ராகம, ஹெம்மாதகமயைச் சேர்ந்த சபீன் நூர்-மஸாஹிமா, தம்பதியரின் செல்வப் புதல்வி நூருல் ஹம்னா, தனது பத்தாவது பிறந்தநாளை 16.07.2015 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.




கெட்டிகலோன பாதுக்க வீதியைச் சேர்ந்த ரமிஜான் அலி-பாத்திமா நுஸ்கியா தம்பதியரின் செல்வப் புதல்வி அப்சா, தனது முதலாவது பிறந்தநாளை 09.07.2015 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ப.ஷீமா,
மட்/அல்/அஸ்ஹர் பெ.உ.,தர.பாட.,
ஏறாவூர்-03.




எஸ்.சபிஷன்,
தலவாக்கலை த.ம.வித்.,
தலவாக்கலை.



எச். அல் மனா,
அல்/முனீறா பாலிகா மகா வித்.,
மட்டக்களப்பு.



ஞா.யேனுபவன்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



எஸ்.பாத்திமா இஷ்பா,
அல்/இர்பான் ம.கல்லூரி,
பொல்கஹாவல.



எஸ்.சலனிகாந்,
/கலைமகள் த.வித்.,
மாவதுர.



எஃப்.சாய்மா,
ஹிஸ்புல்லா மத்திய கல்லூரி,
குருநாகல்.



பு.டனுஸ்காந்,
உடையார்கட்டு ம.வித்.,
உடையார்கட்டு.

# ஏழ்மையால் வாடும் மக்கள்



உலகளாவிய ரீதியில் ஏழ்மை என்பது பாரிய பிரச்சினைகளையே ஏற்படுத்தியுள்ளது. இந்த ஏழ்மைக்கு சனத்தொகைப் பெருக்கம், யுத்தங்கள், இயற்கை அழிவுகள் என்பன முக்கிய காரணங்களாக அமைகின்றன.



அந்தவகையில், சமீபத்திய யுனிசெப் ஆய்வு அறிக்கையின் படி, உலகில் சுமார் 160 கோடி மக்கள் உணவுக்காகவும் சுத்தமான குடிநீருக்காகவும் தவியாய்த் தவிப்பதாக கூறப்படுகின்றது. வேதனை தரும் இந்த அறிக்கையின்படி, ஏழ்மை நிலையில் சுமார் 44 கோடி மக்கள் இந்தியாவில் மட்டும் உள்ளதாகவும், ஆபிரிக்க நாடுகளில் எத்தியோப்பியா, ருவாண்டா உட்பட மேலும் பல ஆபிரிக்க நாடுகள் ஏழ்மையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.




தெற்காசிய நாடுகளில் ஆப்கானிஸ்தானிலும், இந்தியாவிலும் ஏழ்மையில் வாடுவோர் தொகை அதிகமாக உள்ளதாகவும், இது தவிர பங்களாதேஷ், இந்தியா, பூட்டான், இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலும் ஏழ்மையில் வாடும் அதிகளவு மக்கள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஏழ்மை நிலையால் சிறுவர்களும் முதியவர்களும் மிக மோசமாகப் பாதிக்கப்படுவதாகவும் ஏழ்மை அதிகமாக உள்ள நாடுகளில் ஏழ்மைக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் ஊழலால் பின்னடைவை அடைந்து வருவதாகவும் பிந்திய யுனிசெப் ஆய்வு அறிக்கை ஒன்று குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம் வரைவோம்

## குதிரை ஒன்றை வரைவோம்





# அலிபாபாவும் 40 திருடர்களும்

09 கதை, ஓவியம்: வேனு வாரியத்




# உலகில் பிரபல்யமானவர்கள்

# அல்பேர்ட் ஐன்ஸ்டீன்



அல்பேர்ட் ஐன்ஸ்டீன் 1879 இல் ஜேர்மனியிலுள்ள உலமா என்ற இடத்தில் ஒரு யூத குடும்பத்தில் பிறந்தார். 1894 இல் சுவிற்சர்லாந்தில் குடியுரிமை பெற்றுக்கொண்டார். சுவிற்சர்லாந்தில் தனது ஆரம்பக் கல்வியை முடித்துக்கொண்டு பல தொழிநுட்ப கல்லூரிகளில் நேரத்தை செலவழித்தார். 1900 இல் தனது இளமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். 1905 இல் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். லண்டன் றோயல் கழகத்தால் 1919 இல் இவருடைய கண்டுபிடிப்புகளுக்கு உரிய அங்கீகாரம் கிடைத்தபோது, இவருக்கு உயர்ந்த விஞ்ஞானிக்கான சர்வதேச கௌரவம் கிடைத்தது. இதன் பின்னர் ஐரோப்பா முழுவதும் விரிவான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, தனது கண்டுபிடிப்புக் களைக் கல்விமான்களுக்கு விளக்கினார். 1921 இல் இவருக்கு நோபல் பரிசு பௌதீகத்திற்காக வழங்கப்பட்டது. அடுத்த மூன்று வருட காலங்களில் உலகம் முழுவதும் மேலதிக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு தனது கண்டுபிடிப்புக்களை மக்களுக்கு விளக்கினார்.

1905 இல் தனது விஞ்ஞானக் கட்டுரைகளை இவர் வெளியிட்டபோது, ஐன்ஸ்டீனின் பிரபலமான விஞ்ஞானக் கொள்கை வெளியாயிற்று. இந்தக் கண்டுபிடிப்பு இவருக்கு வெளிநேர புவியீர்ப்புத் தொடர்பான மேலும் பல தகவல்களை தரக்கூடியதாக இருந்தது.

1914 இல் ஐன்ஸ்டீன் ஜேர்மனியிலுள்ள பிரஸ்ஸியன் விஞ்ஞானக் கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். ஆனால், யூதர்கள் மேல் ஆழமான வெறுப்பைக் கொண்டிருந்த ஹிட்லர் 1933 இல் அதிகாரத்திற்கு வந்ததால் ஐன்ஸ்டீன் ஜேர்மனியிலிருந்து வெளியேறி அமெரிக்காவில் குடியேறினார். இவர் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பிரின்ஸ்டனில் 1955 இல் தமது 76 ஆவது வயதில் இறை எய்தினார்.

–தொகுப்பு: ஜுனைட் எம்.பஹுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாரணர் கோடரிகளை அறிந்துகொள்வோம்

**திறந்தவெளிப் பகுதிகளில் செயலாற்றும் சாரணர்களுக்கு கோடரி அத்தியாவசியமான ஆயுதமாகும். இத்தகைய, சாரணர் கோடரிகள் நான்கு வகைகளில் தயாரிக்கப்படுகின்றன. அவைபற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

A. சாரணர் கைக்கோடரி
B. இரும்புப் பிடி கொண்ட சாரணர் கோடரி
C. கூர்மையான வெட்டும் பகுதியினைக் கொண்ட சாரணர் கோடரி
D. முன்னோடி சாரணர் கோடரி

### சாரணர் கைக்கோடரி

எடை குறைவான இந்த கோடரியினைப் பயன்படுத்துவது மிகவும் இலகுவானதாகும். அளவில் இந்தக் கோடரி சிறியதாக உள்ளதால் எடுத்துச் செல்வதும் இலகுவாக அமையும்.

### இரும்புப் பிடி கொண்ட சாரணர் கோடரி

இத்தகைய கோடரியின் பெரும்பாலான பகுதிகள் இரும்பினால் செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில், வெட்டும் பகுதியும் பிடியும் நன்கு இரும்பினால் பொருத்தப்பட்டுள்ளன. வெட்டும் பகுதி பிடியிலிருந்து கழன்று சென்று ஆபத்துக்களை ஏற்படுத்துவதைத் தவிர்க்கவே இவ்வாறு இந்த கோடரி தயாரிக்கப்பட்டுள்ளது.






### கூர்மையான வெட்டும் பகுதியினைக் கொண்ட கோடரி

கூர்மையான வெட்டும் பகுதியைக் கொண்ட இந்த கோடரியில் பெரிய பிடி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. பிடியின் நெகிழ்வுத் தன்மை காரணமாக, கோடரியினைப் பயன்படுத்துவது இலகுவாகும். மற்றைய கோடரிகளை விட வினைத்திறன் அதிகம் கொண்டது. இது சாரணர்களின் திறந்த வெளி செயற்பாடுகளுக்கு சிறந்த பயனைத் தரும்.


### முன்னோடி சாரணர் கோடரி

பிடியில் உள்ள நெகிழ்வுத் தன்மை அகற்றப்பட்டு நேரடியான பிடியுடன் இந்த கோடரி தயாரிக்கப்படுகின்றது. கோடரியின் வெட்டும் பகுதியின் எடை அதிகமாகும். பெரிய கண்கொண்ட கோடரியின் முன்பகுதி பரந்துபட்டது. பெரிய மரங்களை வெட்ட இது உதவுகின்றது.

# இரும்பாலான சுத்தியல் இல்லாதவேளை...

**முகாம் கூடாரத்தில் உள்ள உபகரண இறாக்கையில் இரும்பாலான சுத்தியல் இல்லாதபோது, அதற்குப் பொருத்தமான மாற்று வழிகள் உள்ளன. மிகவும் குறுகிய நேரத்தில் தயாரிக்கக்கூடிய முகாம் கூடார சுத்தியல் இங்கு தரப்படுகின்றது.**

**இங்கு காட்டப்பட்டுள்ள சுத்தியலைத் தயாரிக்க தட்டையான கல் ஒன்றும் சரிவர தயாரிக்கப்பட்ட மரப்பிடியுமே தேவை. கொய்யா மற்றும் கோப்பி மரத்தடியின் மூலம் இந்த பிடியினைத் தயாரித்துக்கொள்ள முடியும். அதன் பின் கல்லைப் பிடிக்குள் நுழைத்து கட்டவேண்டும். கயிறு மற்றும் பட்டியினை இதற்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.**



# கற் சுத்தியல் ஒன்றினை உருவாக்குவோம்!

*உபகரணங்கள் அடங்கிய இறாக்கையில் இருக்க வேண்டிய முக்கியமான உபகரணங்களில் சுத்தியலும் ஒன்றாகும். முகாம் கூடார அமைப்பின்போது கூடாரத்தினை தரையோடு பொருத்துவதற்கும் ஆணிகளை அடித்துப் பொருத்தவும் என பல செயற்பாடுகளுக்கு சுத்தியல் அவசியமாகும்.*



*பலம் கொண்ட இரும்பு மற்றும் அடர்த்தி அதிகமான றப்பரை உருக்கி இந்த சுத்தியல் செய்யப்படுகின்றது. இங்கு அவ்வாறான சுத்தியல்களே தரப்பட்டுள்ளன.*


# வெற்றுப் பேணியில் சமையல் செய்வோம்

ஓர் அடி சுற்று வட்டத்தைக் கொண்ட வெற்றுப் பேணி ஒன்றினை எடுத்துக்கொள்ளுங்கள். கறித் தன்மை கொண்ட விறகுத் துண்டினையும் எடுத்து குறுக்கு வடிவில் வைத்துக் கொண்டு அதன்மீது இந்த வெற்றுப் பேணியை நிறுத்தி அதில் சிறிதளவு தண்ணீரை ஊற்றிவிடவும். தேவையான கிழங்கையோ, மரவள்ளியையோ இதில் இட்டு அவித்துக்கொள்ளலாம். குளிர்மையடைந்த உணவுகளை நீர் இல்லாமல் சூடேற்றிக் கொள்ளவும் இந்த வழிமுறையைப் பயன்படுத்தலாம்.



# மரக்கிளையில் பயன்பெறுவோம்

மரத்தடிகள் சிலவற்றை ஒன்றிணைத்து அடுப்படி வேலைகள் சிலவற்றை இலகுவாக செய்யமுடியும். கொய்யா, கோப்பி போன்ற மரங்களின் கிளைத் தடிகளைக் கொண்டு இதற்கான வழிமுறைகளைக் கையாள முடியும். இங்கு படத்தில் நீங்கள் காண்பது அவ்வாறான மரக்கிளையின் பாகங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட சில பயன்களையேயாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாயை வெற்றிகொள்ளும் விதம்

# நாஸா விஞ்ஞானிகளின் முப்பத்தொன்பது நாட்கள் செயற்றிட்டம்

**மனிதனின் செவ்வாய் நோக்கிய பயணத்தில் பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. செவ்வாய்க் கிரகத்திற்கு எவ்வாறு விரைவாகச் செல்லமுடியும்? என்பதே முதலாவது சவாலாக இருக்கின்றது. இதற்கமைய, அமெரிக்காவின் நாஸா பொறியியலாளர்கள் டெக்ஸாஸ்ஸில் உள்ள விமானம் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து 39 நாட்களில் செவ்வாயை அடையக்கூடிய அதிநவீன தொழில்நுட்ப முறை ஒன்றினை முன்வைத்துள்ளனர்.**



செவ்வாய் கிரக வாழ்க்கை ஓர் ஓவியரின் பார்வையில்...

### எட் எஸ்ட்ரா

அதி சக்திவாய்ந்த ரொக்கட் இயந்திரமொன்றை அறிமுகப்படுத்தியதன் மூலமே இந்த 39 நாள் பயண நடைமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு 'வசிமீர்' இயந்திரம் என பெயரிட்டுள்ளனர். அணுசக்தியை பயன்படுத்தியே இது இயங்குகின்றது.

செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதனை எடுத்துச் செல்ல நாஸா நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரொக்கட்டிற்கு இந்த வசிமீர் இயந்திரம் பொருத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

### சவால்களை வெற்றிகொள்ளல்


இப்புதிய தொழில்நுட்பத்தின்மூலம் விண்வெளியின் சவால்களை வெற்றிகொண்டு உளவியல் பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தப் பாதிப்புக்களை எதிர்கொண்டு இடையூறுகள் எதுவுமின்றி விண்வெளி வீரர்களுக்கு செவ்வாய் செல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளதாக தற்போது கருதப்படுகிறது.

செவ்வாய்க் கிரகத்தின் வளிமண்டலம் அடர்த்தியில்லாமல் மிக இலேசானதாக இருப்பதால் அங்கு தரை இறங்குவது பாரிய ஒரு பிரச்சினையாகவே உள்ளது. செவ்வாயின் வளிமண்டலமானது, புவியின் வளிமண்டலத்தில் 1/100 மாத்திரமாகவே உள்ளது. இவ்வாறான நிலையில் புவியில் இருந்து புறப்படும் ரொக்கட்டோ அல்லது செய்மதியோ செவ்வாயின் வளிமண்டலத்திற்குள் நுழைந்தால் அதன் தரை இறங்கும் வேகத்தைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமான விடயமாகவே இருக்கும்.



### முதல் கட்டம்

செவ்வாய்க்கு மனிதனைக் கொண்டு செல்லும் விண்கலத்தை இரு கட்டங்களாக தரையிறக்க நாஸா விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர். முதல் கட்டமாக விண்கலம் தன்னியக்கமாகவே மணிக்கு 1,600 கிலோ மீற்றர் வரை வேகத்தைக் குறைத்துக்கொள்ளும். அவ்வாறு செயற்படுவதற்கான காரணம் எதிர் பக்கமாக விண்கலத்தில் உள்ள சிறிய ரொக்கெட்டை இயக்கி உந்து சக்தியை ஏற்படுத்துவதற்காகவே ஆகும். இந்த புதிய தொழில்நுட்ப யோசனையை கலிபோர்னியாவில் அமைந்துள்ள நாஸா நிறுவனத்தின் பொறியியலாளரான ரொப் மெனிங் என்பவரே முன்வைத்துள்ளார்.



போக்குவரத்து விண்கலம்


### இரண்டாம் கட்டம்

முதலாம் கட்ட நடவடிக்கையில் மணிக்கு 1,600 கிலோ மீற்றர் வேகத்தைக் குறைத்த பின்பே செவ்வாயில் விண்வெளி வீரர்களைத் தரை இறக்கும் இரண்டாம் கட்ட நடவடிக்கை ஆரம்பமாகும். விண் ஆய்வாளர் ரொப் மெனிங் அவர்களின் பொறியியலாளர் குழுவினர் இது குறித்து இன்னமும் உறுதியாக கூறுமளவிற்கு முடிவுகளை எடுக்கவில்லை. எனினும் இது தவிர, விண்கலத்தை இராட்சத பெரஷூட் உதவியுடன் செவ்வாய் மீது இறக்குவதற்கு முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

### நீர்ப்பாவனை

செவ்வாய் நோக்கிய பயணத்தின்போது, உணவும் பானமும் கொண்டுசெல்லுதல் ஒரு பாரிய பிரச்சினையாகவே உள்ளது. இதனால், அதனால் நீரை மீள்சுழற்சி செய்வது மிகவும் முக்கியமான விடயமாகவே இருக்கும். புவியில் வாழும் பொழுது எமக்குப் பொதுவாக நாளொன்றிற்கு இரண்டு லீற்றர் வரையான நீரை அருந்தவேண்டிய நிலை உள்ளது. ஆனால், விண்வெளியில் இருக்கும்பொழுது நாளொன்றிற்கு இதைவிட அதிக அளவான நீர் தேவைப்படும். அந்தவகையில், சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருக்கும் விண்வெளி வீரர் ஒருவர் பொதுவாக, நாளொன்றிற்கு 11 லீற்றர் நீரைப் பயன்படுத்தும் நிலை உள்ளது. அவ்வாறாயின், ஐந்து விண்வெளி வீரர்கள் 1000 நாட்களாக செவ்வாய் கிரகத்தில் தங்கி இருந்தால் 55,000 லீற்றர் நீர் தேவைப்படும். இது மிகப் பெரும் சிக்கலாகவே உள்ளது.

-இரஞ்சித் ஜெயகர்




செவ்வாய்க் கிரக ஆய்வு நடவடிக்கை




ஆய்வுப் பணிகளின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார கார்ட்டூன் படம்





## உலகின் மிகப் பெரிய கப்பல்

உலகின் மிகப் பெரிய கப்பல் எது என்று உங்களுக்குத் தெரியுமா? அதுதான் 'ஜாஹ்ரே வைகிங்' எனும் பெயருடைய கச்சா எண்ணெய்க் கப்பல் ஆகும். ஜப்பானின் சுமிடோமோ ஹெவி இன்டஸ்ட்ரீஸ் எனும் நிறுவனமே இதனை நிர்மாணித்துள்ளது. உலகில் இதுவரை நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களிலேயே மிகப் பெரிய கப்பல் இதுவாகும்.

இதன் எடை 564,000 டொன் ஆகும். 458 மீற்றர் நீளமும் 69 மீற்றர் அகலமும் கொண்ட இந்த கப்பலின் மேல் தளத்தில் நான்கு கால்பந்து மைதானங்களை அமைக்கக்கூடிய அளவிலான இடம் உள்ளதெனக் கூறப்படுகின்றது. சீவைஸ் ஜயன்ட், ஹெப்பி ஜயன்ட், நொக் நெவிஸ், ஒப்பாமா, மொன்ட் என பல்வேறு பெயர்களால் இந்த கப்பல் அழைக்கப்படுகின்றது.




## மூக்குக்கொம்பன்



காண்டாமிருகத்தை தமிழில் 'மூக்குக்கொம்பன்' என்றும் அழைப்பதுண்டு. இந்த விலங்கினம் ஆங்கிலத்தில் Rhinoceros என்று அழைக்கப்படுகின்றது. கிரேக்கச் சொல்லான 'ரைனோகெரஸ்' எனும் சொல்லிலிருந்தே இந்த பெயர் வந்துள்ளது. கிரேக்கத்தில் 'ரைனோ' என்றால் மூக்கு என்றும் 'கெரஸ்' என்றால் கொம்பு என்றும் அர்த்தப்படுகின்றது. இதன் அடிப்படையிலேயே தமிழிலும் 'மூக்குக்கொம்பன்' என்ற பெயர் வழங்கப்படுகின்றது.

## வித்தியாசமான கட்டடங்கள்

நவீன உலகின் முன்னேற்றத்திற்கேற்ப, கட்டட நிர்மாணத் துறையிலும் பல்வேறுபட்ட முன்னேற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அந்தவகையில், உலகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வித்தியாசமான மற்றும் அற்புதமான கட்டடங்கள் சிலவற்றை இங்கு உங்களுக்காகத் தருகின்றோம்.


The Crooked House

* **The Crooked House:** போலந்து நாட்டின் சொபோட் நகரில் உள்ள இந்த கட்டடம், ஒரு ஷொப்பிங் சென்டர் ஆகும். 2004 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இது, 4,000 சதுர மீற்றர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

* **Lotus Temple** (தாமரைக் கோயில்): இந்தியாவின் புது டில்லியில் அமைந்துள்ள இந்த கட்டடம், பஹாய் வழிபாட்டுத் தலம் ஆகும். இது 1986 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.


Lotus Temple


* **Atomium:**- 1958 ஆம் ஆண்டு பெல்ஜியம் நாட்டின் ப்ரஸ்ல்ஸ் நகரில் நடைபெற்ற 'Expo 58' எனும் உலக கண்காட்சியை முன்னிட்டு நிர்மாணிக்கப்பட்டது. இதுவோர் அருங்காட்சியகமாகும்.


Atomium

* **The Basket Building**: அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்திலுள்ள இந்த கட்டடமானது, மரக்கூடைகள் மற்றும் வீட்டுப் பொருட்கள் தயாரிப்பு-விநியோகஸ்தர்களான The Longaberger நிறுவனத்தின் தலைமையகமாகும்.


The Basket Building

* **Community Bookshelf Kansas City Library**: அமெரிக்காவின் மிசூரி மாநிலத்திலுள்ள Kansas City Library யின் ஒரு பகுதியே இது. புகழ்பெற்ற 22 புத்தகங்களை பிரதிபலிக்கும் வகையில் புத்தக இறாக்கையொன்றைப் போல் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.


Community Bookshelf Kansas City Library

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, ஜூலை 15 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 15, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org